# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகாரசபை

# ஆண்டறிக்கை

# 2014

இல. : 70, பாராளுமன்ற வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் : 7909021 - 22
தொலைநகல் இலக்கம் : 2784925 – 28
மின்னஞ்சல் : gmtshda@gmail.com
aetshda1@gmail.com

## தொலைநோக்கு

பொருளாதார மந்றும் சமூக ரீதியாக
ஸ்திரத்தன்மை வாய்ந்த சிறுதேயிலை
பந்றுநிலங்கள் சமூகமொன்றைத்
தோந்றுவித்தல்

## பணிநோக்கு

சிநந்த துணைச் சேவைகளை
வழங்குவதனூடாக தேயிலை சிறு
பந்றுநிலங்கள் பிரிவின் உந்பத்தித் திநனையும்
தரத்தையும் விருத்தி செய்தல்

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
## ஆண்டறிக்கை 2014
## தலைவரின் வாழ்த்துச் செய்தி

தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தியை அதிகரித்து, விளைத்திறனை விருத்தி செய்யும் பொருட்டு பல ஆண்டுகளாக தொடர்ந்தேச்சையாக அரசாங்க அனுசரணையைப் பெற்ற ஒரு துறையாக விளங்குவதும், அவ் அனுசரணையுடன் ஆக்கபூர்வமான பெறுபேறுகளை தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை பெற்றுள்ளது பற்றியும் 2014 ஆண்டில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் வருடாந்த உற்பத்திக்கமைய மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சலுகை விலையின் கீழ் தேயிலை உர கலப்புக்களை பெற்றுக் கொள்ள முடிந்தமை, மீள் பயிரீட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு அண்மைக்காலமாக பல்வேறு தடவைகள் மானியத் தொகையை அதிகரித்தமை, 2014 ஆண்டில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு மானியத்தினைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை என்பன தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு பெற்றுக் கொண்ட அடைவுகளாகும்.

2014 ஆண்டில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு தொடர்பாக விளைதிறன் மற்றும் விருத்திச் செயற்திட்டங்களின் கீழ் 190123 தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்குச் சொந்தமான 129022 ஏக்கரில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ரூபா 403.64 மில்லியன் தொகையை மானியமாக வழங்க முடிந்தது.

முன்னைய ஆண்டை விட ஒரு கிலோ மூலப்பொருளுக்கான சாதாரண அதிகூடிய விலை, மேலே குறிப்பிடப்பட்ட மானியத்தின் கீழ் பயிரீட்டுக் கிரயம் குறைவடைந்தமை மற்றும் உற்பத்தி அதிகரித்தமை என்பன தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை பெற்றுக்கொண்ட பொருளாதார அடைவுகளாகும்.

2014 ஆண்டில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை, இதுவரை தனது வருடாந்த உச்ச உற்பத்தியாக 247 கிலோ மில்லியன் தேயிலையை தேசிய தேயிலை உற்பத்திக்கு வழங்கியுள்ளது. இது மொத்தத் தேசிய உற்பத்தியின் 73.01% வீதமாகும். அவ்வாறே முன்னைய ஆண்டுக்கு நிகராக உற்பத்தி 0.8% வீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும் 2014 ஆண்டின் தேசிய உற்பத்தி 338.0 கிலோ மில்லியன் ஆக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டுக்கு நிகராக 0.6% வீதத்தால் குறைவடைந்திருந்தது.

தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி 0.8% வீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், மேற்படி நலன்களுக்கு அமையவும், ஆண்டிறுதியில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் காரணமாக விளைச்சல் குறைவடையாதிருப்பதற்கு தேயிலை சிறு பற்றுநில துறை அதிகூடிய கவனஞ் செலுத்தியதி எனலாம்.

**தீப்தி அபேவிக்ரம**
**தலைவர்**

## தேயிலை சிறு பற்றுநில துறையின் பயன்விளைவுச் சுட்டி - 2014

| | | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| 1 | **தேயிலை சிறு பற்றுநிலங்கள் (ஹெக்ரயார்)** | 120,955 | 121,267 | 121,429 |
| 2 | **தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள்** | 390,346 | 391,226 | 392,108 |
| 3 | **தேயிலை சிறு பற்று நில உற்பத்தி ( கிலோ மில்லியன்)** | 233.10 | 245.43 | 247.38 |
| 4 | **தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு வீதம்** | 71.4 | 72.2 | 73.1 |
| 5 | **சாதாரண உற்பத்தித்திறன் (தேயிலை/கி.கி./ஹெக்.)** | 2,001 | 2,107 | 2,123 |
| 6 | **தேயிலை மீள்பயிர் நிலங்கள்/ஹெக்ர. (ஊக்குவிப்பு)** | 889 | 1165 | 720 |
| 7 | **தேயிலை புதிய பயிர் நிலங்கள்/ஹெக்ர. (ஊக்குவிப்பு)** | 239 | 263 | 401 |
| 8 | **மீள் பயிரிடல் வீதம்** | 0.76 | 0.93 | 0.64 |
| 9 | பயிர் புனர்ஜீவனம் - செடி எண்ணிக்கை (மில்லியன்) | 0.767 | 0.497 | 0.271 |
| 10 | தே. சிறு ப. அபிவிருத்திச் சங்கங்களின் - எண்ணி. | 1,381 | 1,382 | 1,383 |
| | உறுப்பினர்களின் எண்ணி | 261,493 | 251,794 | 266,480 |
| 11 | விஸ்தரிப்பும் **ஆலோசனை–** தேயிலை விஸ்தரிப்பு எண்ணிக்கை | 27,843 | 26,980 | 25,490 |
| | குழுநிலை நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணி. | 6,508 | 6,617 | 7,064** |
| | விவசாயிகளின் பங்கேற்பு | 143,456 | 137,661 | 315,973** |
| 12 | நிறுவன செயற்பாட்டுக் கிரயம் (1 ரூபாவிற்கான அபிவிருத்தி) | 0.85 | 0.54 | 0.73 |
| 13 | தேயிலை பரிசோதகர் /விஸ்தரிப்பு அலுவலர் : தேயிலை பயிர்செய்கையாளர்களின் விகிதம | 1:2730 | 1:2736 | 1:2742 |
| 14 | ஒரு கி. கிராம் சாதாரண பச்சைத் தேயிலையின் விலை ரூ | 57.27 | 64.99 | 67.54 |

***.சிறு பெருந்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 41 ஹெக். பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. அதில் 761 ஹெக்ரயாரில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது.**

** மண் மற்றும் நீர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் 438 குழும நிகழ்ச்சித்திட்டங்கள் (54% ஆல்) மற்றும் தனிநபர் பங்களிப்பு 100194 ஆல் (574% ஆல்) அதிகரித்திருந்தது.

# உள்ளடக்கம்


பக்கம்

| | | |
|---|---|---|
| I | பணிப்பாளர் சபை | 01 |
| II | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 02 |
| III | பதவிநிலை பணியாட் தொகுதியினர் நிர்வாக மாவட்ட அலுவலகங்கள் | 03 |

**பொழிப்பு**
14

1 **ஆம் அத்தியாயம்**

**அறிமுகம்**

| | | |
|---|---|---|
| 1.1 | நிறுவனமும் தொழிற்பாடுகளும் | 17 |
| 1.2 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுப் பணிகள் | 18 |
| 1.3 | நிர்வாகப் பணிகள் | 19 |

2 **ஆம் அத்தியாயம்**

| | | |
|---|---|---|
| | **இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு** | 21 |
| 2.1 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் | 21 |
| 2.2 | தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்பு | 21 |
| 2.3 | தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள் | 22 |
| 2.4 | தேயிலை சிறு பற்றுநிலங்களின் எண்ணிக்கை | 22 |
| 2.5 | நில வகைப்படுத்தல் | 23 |
| 2.6 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி | 23 |
| 2.7 | உற்பத்தித் தொகுப்பு | 26 |
| 2.8 | உற்பத்தித்திறன் | 27 |
| 2.9 | முதலீடுகள் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு | 28 |

3 **ஆம் அத்தியாயம்**

| | | |
|---|---|---|
| | **நியதிச்சட்ட நோக்கங்களும் சாதகப் பெறுபேறுசார் அபிவிருத்திப் பணிகளும்** | 31 |
| 3.1 | மத்தியகால சாதகப் பெறுபேறுசார் அபிவிருத்தி இலக்குகள் / பணிகள் | 35 |
| 3.2 | தேயிலை சிறு பற்றுநிலங்களின் முதலீட்டு மேம்பாடு தொடர்பான விசேட செயற்திட்டப்பணிகள் | 56 |
| 3.3 | ஒரு தசாப்தத்தின் விசேட செயலாற்றுகை | 60 |
| 3.4 | பிரதான சாதகப் பயன்விளைவுச் சுட்டிகள் | 61 |

4 **ஆம் அத்தியாயம்**

| | | |
|---|---|---|
| | **தேயிலை சிறு பற்றுநில பிரிவின் பயிரிடல் கிரயம் மற்றும் கொழுந்து விலை** | 62 |
| 4.1 | தொழிலாளர் கிரயம் | 62 |
| 4.2 | ஒரு கிலோ பச்சைக் கொழுந்துத் தேயிலையின் உற்பத்திக் கிரயம் | 62 |
| 4.3 | உற்பத்தி வரம்பெல்லை மற்றும் விலை | 63 |
| 4.4 | தேயிலை மீள்பயிரிடல் கிரயம் | 63 |
| 4.5 | ஊக்குவிப்புக் கொடுப்பன வீதமும் பயிரிடல் கிரயமும் (ஒரு ஹெக்ர.) | 64 |

| | | |
|---|---|---|
| 5 | **அட்டவணை** | 65 |
| **6** | நடப்பாண்டின் கணக்குக் கூற்றுக்கள் மற்றும் ஐந்தொகை | 89 |
| **7** | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 101 |

## அட்டவணை


| இல. | | | பக்கம் |
|---|---|---|---|
| (1) | நிறுவகத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதி | - 2014 | 65 |
| (2) | நிறுவகத்தில் பணிபுரியும் பணியாட்தொகுதி | - 2014 | 66 |
| (3) | 3- I பணியாட்தொகுதியினரின் வயது கட்டமைப்பு பகுப்பாய்வு | - 2014 | 67 |
| | 3- II நிறைவேற்றுத்தர அலுவலர்களின் கல்வி மட்டத்திற்கேற்ப வகுத்தல் - 2014 68 | | |
| (4) | தேயிலை சிறு பற்றுநில பிரிவின் உற்பத்தி | 1983 - 2014 | 73 |
| (5) | தேயிலை மீள் பயிரிடல் உதவித் திட்ட செயற்பாடு | 1978 – 2014 | 74 |
| (6) | பயிர் புனர்ஜீவனம் (இடை நடுகை) உதவித் திட்ட செயற்பாடு | 1979- 2014 | 75 |
| (7) | புதிதாக தேயிலை பயிரிடல் உதவித் திட்ட செயற்பாடு | 1978 – 2014 | 76 |
| (8) | தேயிலையுடன் இறப்பர் பயிரிடல் உதவித் திட்டம் | 1999 -2009 | 77 |
| (9) | 9 - A தாய் செடிகளின் மூலம் புதுவகை காம்புகள், கிளைகள் விநியோகம் 2014 | | 78 |
| | 9 - B நிறுவக ரீதியான தேயிலை நாற்றுமேடைகளின் செயற்பாடு - 2014 | | 79 |
| | 9 - C வணிக ரீதியான நாற்றுமேடைகளின் செயற்பாடு - 1992-2014 | | 80 |
| (10) | 10 - A அமைவிடத்திற்கேற்ப கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் தேயிலை விலை 1985 – 2014 | | 81 |
| | 10 - B பச்சைக் கொழுந்து ஒரு கிலோவிற்கான உற்பத்திக் கிரய மதிப்பீடு (மானியம்) - 2014 | | 82 |
| (11) | 11 - A பயிரிடல் கிரய மதிப்பீடு – மேட்டுநிலம் / மத்திய நிலம் தேயிலை மீள் பயிரிடல் ஒரு ஹெக்ரயாருக்கு– 2014 | | 83 |
| | 11 - B பயிரிடல் கிரய மதிப்பீடு – தாழ்நிலம் தேயிலை மீள் பயிரிடல் ஒரு ஹெக்ரயாருக்கு– 2014 | | 84 |
| (12) | தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு தவணை முறைக் கடன் திட்டத்தின் கீழ் உரம் வழங்கல் | 1993 – 2009 | 85 |
| (13) | தேயிலை ஏற்றுமதி மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டல் | | 86 |
| (14) | தேறிய தேசிய உற்பத்திக்கு தேயிலையின் மூலம் திரட்டப்பட்ட பெறுமதி | | 87 |
| (15) | தேயிலை பயிர்செய்கையில் இயந்திரப் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்தல் செயற்திட்டம் | | 88 |
| (16) | தேயிலை பயிர்செய்கையில் இயந்திரப் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்தல் செயற்திட்டம் - நிதிசார் பெறுமதி | | 89 |

பக்கம்

**உரு இலக்கம்**


| | | |
|---|---|---|
| (1) | மொத்தத் தேயிலை நிலங்கள் தொடர்பாக சிறு பற்றுநிலங்களின் பங்களிப்பு | 21 |
| (2) | முகாமைத்துவ நிறுவனங்களின் உற்பத்திப் பங்களிப்பு வீதம் | 24 |
| (3) | தேயிலை சிறு பற்றுநில பிரிவின் மாதாந்த தேயிலை உற்பத்தி (2010/ 2014) | 25 |
| (4) | தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் வருடாந்த தேயிலை உற்பத்தி வளர்ச்சி (2000 / 2014) | 25 |
| (5) | தேயிலை மீள் பயிரிடல் மானியம் அதிகரிப்பு – 1979 இலிருந்து | 35 |
| (6) | தேயிலை மீள் பயிரிடல் உதவி தொடர்பாக விண்ணப்பித்தல் (2000 – 2014) | 36 |
| (7) | தேயிலை மீள் பயிரிடல் உதவிக் கொடுப்பனவுகள் பற்றிய மேம்பாடு (1994 – 2014) | 38 |
| (8) | தேயிலை புதிதாக பயிரிடல் மானியம் அதிகரித்தல் 1979 இலிருந்து | 39 |
| (9) | தேயிலை புதிதாக பயிரிடல் உதவிக் கொடுப்பனவுகள் பற்றிய மேம்பாடு (1993 – 2014) | 41 |
| (10) | பயிர் புனர்ஜீவன உதவித் திட்ட கொடுப்பனவுகளின் மேம்பாடு (1993 – 2014) | 44 |

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை

## தலைமை அலுவலகக் கட்டமைப்பு




கட்டமைப்பு
முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் MSD /30இற்கு அமைய

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை

## பிரதேச அலுவலகக் கட்டமைப்பு




(6) மத்திய முகாமைத்துவம் 1-1

(26) மத்திய முகாமைத்துவம் 1-1

(30) கனிஷ்ட முகாமைத்துவம்1-1

(165) முகாமைத்துவ உதவியாளர் 2-2

(119) முகாமைத்துவ உதவியாளர் 1-2

(07) முகாமைத்துவ உதவியாளர் 1-2(நாற்று உதவி:)

(14) ஆரம்ப மட்டம் 3

(18) ஆரம்ப மட்டம் 1

385

கட்டமைப்பு

முகாமைத்துவ சேவைத் திணைக்களம் MSD /30 இற்கு அமைய

## பணிப்பாளர் சபை

1. தலைவர் - திரு நொஎல் பத்மசிறி காரியவசம்

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | போராசிரியர் எஸ்.எஸ்.பீ.டீ.ஜீ. ஜயவர்த்தன | தலைவர்<br>தேயிலை ஆராய்ச்சி சபை | 051-3519619 |
| 2. | திரு. எம். விதானபத்திரன | பிரதிநிதி<br>தனியார் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் | 077-6031000 |
| 3. | திருமதி. திஷ்னா தர்மசேகர | சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதில் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதில்<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 011-2304132 |
| 4. | திருமதி. எம். அனோமா நந்தினி | பணிப்பாளர்<br>அரச நிதித் திணைக்களம் | 011-2480600 |
| 5. | திரு. ஈ.ஏ.டப். எதிரிசிங்க | பணிப்பாளர் நாயகம்<br>இலங்கைத் தேயிலை சபை | 011-2508991 |
| 6. | திரு. நெவில் ரத்நாயக்க | கௌரவ தலைவர்<br>அகில இலங்கை சம்மேளனம் | 077-2910003 |
| 7. | திரு. கே.எல். குணரத்ன | கௌரவ செயலாளர்<br>அகில இலங்கை சம்மேளனம் | 077-7707623 |
| 8. | திரு. எம்.எ.ஃப்.எஸ்.டப். ஸ்ரம்போ | கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் பிரதிநிதி | 0777-226751 |
| 9. | திரு. ரொசான் ராஜதுரை | முகாமைத்துவ பணிப்பாளர்<br>களனிவெலி மற்றும் தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனி | 011-2686274 |
| 10. | திரு. பீ.ஜீ. தசநாயக்க | முகாமைத்துவப் பணிப்பாளர்<br>அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம்<br>(பணிப்பாளர்சபை கண்காணிப்பு உறுப்பினர்) | 011-2859218 |
| 11. | திரு. தமித் லொக்குபண்டார | கண்காணிப்பு உறுப்பினர்<br>இல. 14, சமகி மாவத்தை, கங் கொடவில, நுகேகொட | |

உரிய ஆண்டு காலப் பகுதியில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் - திருமதி அனோமா நந்தினி | பணிப்பாளர்<br>அரச நிதித் திணைக்களம் | 011-2480600 |
| 2. | உறுப்பினர் -<br>திருமதி. திஷ்னா தர்மசேகர | சிரேஷ்ட உதவிச் செயலாளர் - பதில் பணிப்பாளர் (அபிவிருத்தி) - பதில்<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு<br>கொழும்பு 02. | 011-2304132 |
| 3. | உறுப்பினர் - திரு. எம்.எ.ஃ.ப்.எஸ்.டப். ஸ்ரம்போ | கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் பிரதிநிதி | 0777-226751 |
| 4. | உறுப்பினர் - திரு. கே.எல். குணரத்ன | கௌரவ செயலாளர்<br>அகில இலங்கை சம்மேளனம் | 077-7707623 |
| 5. | கண்காணிப்பாளர் – திருமதி சுவிநீதா அன்ரனி | கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காய்வு உப அலுவலகம்<br>இலங்கைத் தேயிலை சபை<br>காலி வீதி, கொழும்பு 03 | 011-2583687 |

2014 ஆண்டு காலப் பகுதியில் 03 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**நிறைவேற்றுத்தர பணியாட்தொகுதி மற்றும் நிர்வாக மாவட்ட அலுவலகங்கள்**

**தலைமை அலுவலகம்**

**இலக்கம் 70, பாராளுமன்ற வீதி,**

**பெலவத்தை, பத்தரமுல்லை.**

**தொலைபேசி : 011 – 7909020/21**

<u>நிறைவேற்றுத்தர பணியாட்தொகுதி</u>

| | |
|---|---|
| தலைவர் | : திரு நொஎல் பத்மசிறி காரியவசம் |
| பொது முகாமையாளர் | : திரு.கே.ஜீ.பீ. ஒபேசேக்கர (2014.04.26 இலிருந்து) |
| பொது முகாமையாளர் | : திரு. எம்.பீ. சிறில் (2014.04.28 வரை) பதில் (2014.09.01 இலிருந்து) |

**விஸ்தரிப்புப் பிரிவு :**

| | |
|---|---|
| பிரதிப் பொதுமுகாமையாளர் (விஸ்தரிப்பு) | : திரு. எம்.பீ. சிறில் |
| முகாமையாளர் (சமுதாய அபிவிருத்தி | : திரு.ஆர்.ஏ.ஜீ.பி. ரனசிங்க ((2014.09.01இலிருந்து) |

**அபிவிருத்திப் பிரிவு :**

| | |
|---|---|
| பிரதிப் பொதுமுகாமையாளர் (அபிவிருத்தி) | : திரு. எம்.பீ. சிறில் (2014.09.01 வரை) |
| முகாமையாளர் ( சமூக அபிவிருத்தி ) | : திரு. ஜே.எம்.ஜி. ஜயசிங்க |

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு:**

| | |
|---|---|
| முகாமையாளர் ( திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ) | : திருமதி எம்.ஐ.எம்.ஜே. சமரவிக்ரம |
| உதவி முகாமையாளர் ( திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ) | : திரு. ஆர்.ஏ. வைத்தியரத்ன |

**நிதிப் பிரிவு :**

| | |
|---|---|
| முகாமையாளர் ( நிதி ) | : திருமதி டீ.ஜீ.பி. ஜயந்தி |
| உதவி முகாமையாளர் ( நிதி ) | : திரு. பீ.ஆர். இந்திக பெரேரா |
| உதவி முகாமையாளர் ( நிதி ) | : திரு. பீ.எச்.சீ.ஏ. பட்டகொட (2014.08.04 வரை) பதில் (2014.08.05 இலிருந்து) |

**மனித மற்றும் நிர்வாகப் பிரிவு :**

| | |
|---|---|
| முகாமையாளர் (மனிதவளம் / நிர்வாகம்) | : ---- |
| உதவிப் பொதுமுகாமையாளர் (சேவை) பணிப்பாளர் சபை செயலாளர் | : திரு. அமித பஸ்குவல் |
| உதவி செயற்திட்ட முகாமையாளர் | : திரு. ஹர்சான் த சில்வா ((2014.08.04 வரை) |
| உதவி முகாமையாளர் (மனிதவளம் / நிர்வாகம்) | : (2014.08.05 இலிருந்து) |
| உதவி முகாமையாளர் (மனிதவளம் / நிர்வாகம்) | : திரு. கே.ஏ.சீ.எஸ்.பீ. பர்னாந்து ((2014.08.15 இலிருந்து) |
| நிர்வாக அலுவலர் | : திருமதி. கருணா சோமசிறி (2014.02 வரை) |
| நிர்வாக அலுவலர் | : திருமதி. சரத்சந்திர முரமுதலிகே ((2014.02.5 இருந்து)பதில் |

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு :**

| | |
|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் | : திரு. கே.ஜீ. நாரத |
| உள்ளகக் கணக்காய்வு அலுவலர் | : திரு. தமிந்த பிரியன்ஜித் |

# பிரதேச அலுவலகம் - காலி
## இல. 81, வெளிச்சவீட்டு வீதி,
## கோட்டை, காலி
## நிர்வாக மாவட்டம் - காலி

தொலைபேசி இல.: 091-7201126/28
தொலைநகல் : 091-2244382 - மின்னஞ்சல் tshdaga@gmail.com

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. ஏ.டப்.டப். கருணாரத்ன (2014.06.07 வரை) |
| | : | திரு. எல்.எச். ரஞ்சித் (2014.03.10 இருந்து) த.க. (2014.06.25 இருந்து) பதில் |
| உதவிப் பிரதேச முகாமையாளர் | : | திரு. எல்.எச். ரஞ்சித் (2014.01.01 இருந்து) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) பொறுப்பான அலுவலர் | : | திரு. டி.எம்.ஜே. நாகந்தல |
| | : | திரு. டீ.எல்.சி. சூரியாரச்சி |
| | : | திரு. எல். கே. வீரசேக்கர (2014.08.04 வரை) |
| | : | திரு. ஜீ. சிசிர குமார |
| | : | திரு. ஈ.ஜீ.டி. சாந்தசிறி (2014.10.15 இலிருந்து) |
| நிர்வாக அலுவலர் | : | திரு. எச். தயானந்த (2014.06.31 வரை) |
| | : | திருமதி. கே.எம்.எச்.ஏ. அமரலதா (2014.07.01 இலிருந்து) |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. யு.எல்.எம். பெரேரா |

| விஸ்தரிப்பு நிலையம் | உப அலவலகம் | சேவை பிரிவு |
|---|---|---|
| தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை பிரதேச விஸ்தரிப்பு நிலையம் வலஹந்துாவை வத்தை, காலி தொலைபேசி இல.: 091-7200815 | வதுரம்ப | குருபனாவ, உனன்விட்டிய, உடுகம, பத்தேகம, வதுரம்ப |
| | எல்பிட்டிய | எத்கந்துர, பிட்டிகல, நியாகம, எல்பிட்டிய, படபொல, கஹதுாவை |
| | ஹிங்கல்கொட | தெல்லவ, மாவனான, நெளுவை, ஹபரகட, ஹல்விட்டிகல, ஹினிதும, ஓபாத, தெல்லவ |
| | ஆக்மீமனை | இமதுாவ, கொட்டாவ, யக்கலமுல்ல, பெரனாகொட, அக்மீமனை |

## பிரதேச அலுவலகம் - மாத்தறை
## இல. 31, காளிதாஸ் வீதி, மாத்தறை
## நிர்வாக மாவட்டம் - மாத்தறை / ஹம்பாந்தோட்டை

தொலைபேசி இல.: 041 – 7200799 - 041 – 7200394/96
தொலைநகல் : 041 - 2226487 - மின்னஞ்சல் tshdamt@gmail.com

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. ஜி.ஜி. பந்துல |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு.ஈ.ஆர்.எஸ்.குணவர்த்தன |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (திட்டமிடல், அபி.) | : | திரு. எல்.எச். ரஞ்சித் (2014.01.01 வரை) |
| | : | திரு. எஸ்.எஸ்.பி. திசாநாயக்க (2014.08-14 வரை) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (மனிதவள, நிர்வாகம்) | : | திரு. எச். தயானந்த (2014.08.05 இலிருந்து 2014.11.16 வரை) |
| பொறுப்பான அலுவலர் | : | திரு.ஜே.எல்.எதிரிசூரிய - (பதில்) |
| | : | திரு.ஜீ.ஜீ.எஸ். தேசபிரிய (பதில்) |
| | : | திரு. ஈ.ஜீ.டி. சாந்தசிறி (பதில்) (2014.10.14)வரை |
| நிர்வாக அலுவலர் | : | திருமதி. கே.எச்.எம்.ஏ.அமரலதா – (2014.06.31 வரை) (பதில்) |
| | : | திரு. எச். தயானந்த ( 2014.07.01 இலிருந்து 2014.08.04 வரை |
| | : | திருமதி என்.வீ. ப்ரீதி புஷ்பகுமாரி (2014.11.25 ) |
| கணக்கு அலுவலர் | : | திருமதி.எச்.எம்.எல். புஷ்பகுமார |

| விஸ்தரிப்பு நிலையம் | உப அலவலகம் | சேவை பிரிவு |
|---|---|---|
| தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை பிரதேச விஸ்தரிப்பு நிலையம் மொரவக்க, அலபலாதெனிய | கொட்டபொல | தெனியாய<br>களுபோவிடிய<br>மொரவக்க<br>தேரங்கல<br>கொலவனிகம<br>கொட்டபல<br>பிட்டபெந்தர |
| | அக்குரஸ்ஸ | கணங்கே<br>அக்குரஸ்ஸ<br>தெலிஜ்ஜவில<br>திப்பட்டுவாவ<br>கெட்டன்வில<br>கம்புறுபிட்டிய |
| | பஸ்கொட | பெரலபனாதர<br>வராபிட்டிய<br>கிரிலிபன<br>தம்பஹல<br>பஸ்கொட<br>ஊருபொக்க<br>தெய்யந்தர |

# பிரதேச அலுவலகம் - இரத்தினபுரி
# இல. 1/28, புதிய நகரம், இரத்தினபுரி
# நிர்வாக மாவட்டம் - இரத்தினபுரி

**தொலைபேசி இல.:** 045-7201243 - 045 - 7201904
**தொலைநகல்** : 045 - 2228647 - **மின்னஞ்சல்** tshdarat@gmail.com

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. யூ.எல். ஆரியபால (2014.08.14 வரை) |
| | : | திரு. எஸ்.எஸ்.பி. திசாநாயக்க (2014.08-15இருந்து)பதில் |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. எம்.ஆர்.என். தம்மிக |
| உதவி பிரதேச முகாமையாளர் (திட்டமிடல், அபி.) | : | திரு. டப்.எச்.எஸ்.பீ. விஜேதுங்க (2013-7-19இலிருந்து) பதில் |
| பிரதேச திட்டமிடல் அலுவலர் | : | திரு. டப்.எச்.எஸ்.பீ. விஜேதுங்க |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. டப்.எச்.எஸ்.பீ. விஜேதுங்க (2014-6-17) இலிருந்து) : |
| | : | திரு. கே.எம்.ஆர்.எல். பண்டார |
| | : | திரு. பீ.டீ.கே. பாலசந்திர - (பதில்) |
| | : | திரு. எச்.எம். சந்திரபால (2014.06.17 இருந்து) |
| | : | திரு. எம்.எம். குமாரசிறி (2014.10.15 இருந்து) : |
| நிர்வாக அலுவலர் | : | திரு. கே.எம். சேனாரத்ன (2014.06.31 வரை) பதில் |
| | : | திருமதி. என்.வீ.பீ. புஷ்பகுமாரி (2014.07.01 இருந்து) |
| | : | திரு. கே.எம். சேனாரத்ன – பதில் (2014.11.26 இலிருந்து)க. |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. எம்.ஏ. பியசீலி |

**விஸ்தரிப்பு நிலையம்**
தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை
பிரதேச விஸ்தரிப்பு நிலையம்
சன்னஸ்கம, இரத்தினபுரி.
தொலைபேசி இல.: 045 - 7201170

| **உப அலவலகம்** | **சேவை பிரிவு** |
|---|---|
| நிவித்திகல | நிவித்திகல<br>இரத்தினபுரி<br>வெந்தாகல<br>கலவானை<br>அயகம<br>குகுலேகம |
| பலாங்கொடை | ஓப்பநாயக்க<br>பின்னவலை<br>ராஸ்ஸகல<br>இம்புல்ப்பே<br>எல்லராவை<br>வலிகெபொல<br>பலாங்கொடை |
| இரக்குவானை | பொத்துபிட்டிய<br>மாதம்பே<br>கோலொன்ன<br>இரக்குவானை<br>பெல்மடுல்ல<br>கஹவத்தை |
| குருவிட்ட | எஹலியகொட<br>கல்லேல்ல<br>கிலிமலை<br>எரத்ன<br>கிரிஎல்ல<br>வேவல்வத்தை |

## பிரதேச அலுவலகம் - கண்டி
## இல. 2/7/1, கன்கொருவ வீதி, கண்டி
## பேராதெனிய, கண்டி
## நிர்வாக மாவட்டங்கள் - கண்டி, மாத்தளை, குருனாகலை

**தொலைபேசி இல :- 081-7200827 - 081-7201821**
**தொலைநகல் :- 081- 2389011 / மின்னஞ்சல் - tshdakan@gmail.com**

| | |
|---|---|
| பிரதேச முகாமையாளர் | : திரு. கே.ஏ.பீ.த.ஏ ராஜபக்ச |
| உதவி பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : திரு. எல். கே. வீரசேகர (2014.08.05 இருந்து) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (திட்டமிடல், அபி.) | : திரு. எம்.எம். விஜேபண்டார (2014.10.12 வரை) |
| பொறுப்பான அலுவலர் | : திரு. டப்.ஜே.டப். அம்பேபொல |
| | : திரு. ஜீ.என். யகமுனி (2014.08.14 வரை)-பதில் |
| | : திரு. ரி.எம்.ஜே. ஹேரத் |
| | : திரு. ரி. அமரசேகர |
| | : திரு. அனுருத்த பண்டார |
| நிர்வாக அலுவலர் | : திரு. பீ.எம்.ஜீ. பண்டாரநாயக்க (2014.10.27 வரை) |
| நிர்வாக அலுவலர் | : திருமதி. ஏ.டப்.பீ. நந்தாவதி (2014.11.10 இருந்து) பதில் |
| உதவிக் கணக்காளர் | : திரு. ஏ.பீ. சோமசிறி |
| மக்கள் தொடர்பாடல் அலுவலர் | : திரு. ஏ. திசாநாயக்க (2014.11.13 இருந்து) |

| **விஸ்தரிப்பு நிலையம்** | **உப அலவலகம்** | **சேவை பிரிவு** |
|---|---|---|
| தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>சூரியகொட, முருதலாவ.<br>தொலைபேசி இல : 0817201921 | மாத்தளை | உக்குவளை<br>மாத்தளை<br>இரத்தோட்டை<br>அலவதுகொடை |
| | வத்தேகம | பூஜாபிட்டிய<br>வரல்லகம<br>தெல்தெனிய<br>வத்தேகம |
| | ஹங்குரன்கெத | ஹேவாஹெட்ட<br>மந்தாரம்நுவர<br>ஹங்குரன்கெத்த<br>வலப்பனை |
| | கிராகம | கன்னொருவை<br>கலகெதர<br>மெனிக்திவல<br>தந்துறை |

# பிரதேச அலுவலகம் - நுவரெலியா
## இல. 22, கந்தே வீதிஇ கம்பளை
## பேராதெனிய, கண்டி
## நிர்வாக மாவட்டங்கள் - நுவரெலியா, கண்டி

**தொலைபேசி இல :- 081-72001863/ 081-7201593**
**தொலைநகல் :- 081- 2351293 / மின்னஞ்சல்- tshdane@gmail.com**

| | |
|---|---|
| பிரதேச முகாமையாளர் | : திரு. ஏ. குனவர்தன (2014.01.09 இருந்த) க.பு. |
| | : (2014.06.25 இருந்து 2014.08.13 வரை) பதில் |
| | : திரு. எம்.எம். விஜேபண்டார (2014.10.13 இருந்து) க.பு. |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : திரு.எஸ்.எம்.கே.பீ. கபுகெதர (2014.08.04 வரை) பதில் |
| | : (2014.08.05 இருந்து) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (திட்டமிடல், அபி.) | : திரு. ஏ. குனவர்த்தன 92014.08.31 வரை) |
| பொறுப்பான அலுவலர் | : திரு. டீ.எம்.ஆர்.கே.பீ. தசநாயக |
| | : திரு. ஜே. போகஹவத் தை (2014.06.04 வரை) |
| | : திரு.எஸ்.எம்.கே.பீ. கபுகெதர (2014.08.04 வரை) |
| | : திரு. ஜீ.என். யகமுனி (2014.08.14 இருந்து)-பதில் |
| | : திரு. கே.ஏ.கம்.டீ.எஸ். குருப்பு (2014.10.14 வரை) பதில் |
| | : திரு. டீ.எஸ். ரணவீர (2014.10.14 வரை) பதில் |
| | : திரு. பீ.டீ.ஏ. ஹியராபிட்டிய பதில் |
| | : திரு. எச்.எம். பிரேமகுமாரி (2014.10.15 இருந்து) |
| நிர்வாக அலுவலர் | : திரு. பீ.ஐ.யூ. சோமசிறி |
| உதவிக் கணக்காளர் | : திருமதி. சியாமலீ பிரேமசுந்தர |
| மக்கள் தொடர்பாடல் அலுவலர் | : திரு. ஏ. திசாநாயக்க (2014.11.12 வரை) |

| **விஸ்தரிப்பு நிலையம்** | **உப அலவலகம்** | **சேவை பிரிவு** |
|---|---|---|
| தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை திஸ்பனே<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>திஸ்பனே, நவ திஸ்பனே<br>தொலைபேசி இல : 0817201950 | கம்பளை | பன்விலதென்ன<br>கம்பளை<br>நில்லம்ப<br>புபுரஸ்ஸ<br>புஸ்ஸல்லாவை |
| | உடுநுவர | ஹந்தெஸ்ஸை<br>வட்டப்பரொல<br>குருந்துவத்தை<br>உலப்பனை<br>தொலஸ்பாகே |
| | கொத்மலை | ருவன்புர<br>திஸ்பன<br>ஹரங்கல<br>ஹெல்பொட<br>பூண்டுலோயா |
| | கினிகத்ஹேனை | கினிகத்ஹேனை<br>பொல்பிட்டிய<br>லக்ஷபான<br>நாவலப்பிட்டிய<br>வெலிகம்பளை<br>பன்விலதென்ன |

# பிரதேச அலுவலகம் - ஊவா
# புதிய பதுளை வீதி, பண்டாரவளை
# நிர்வாக மாவட்டங்கள் - பதுளை, மொனராகலை

**தொலைபேசி இல :- 057-72000241/ 057-7200081**
**தொலைநகல் :- 057- 2232237 / மின்னஞ்சல் - uvatshda@gmail.com**

| | |
|---|---|
| பிரதேச முகாமையாளர் | : திரு. எச். ஆர் அரருணசாந்த |
| உதவி பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : திரு. ஐ.யு.எச். மொஹொட்டி (2014.08.11 இருந்து) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (திட்டமிடல், அபி.) | : திரு. எச். கே. லலித் குமார |
| பொறுப்பான அலுவலர் | : திரு. கே.எம்.ஏ.டீ.எஸ். குருப்பு (2014.10.14 வரை) பதில் |
| | : திரு. எஸ்.சீ. முத்தநாயக்க (2014.10.15 இருந்து) |
| | : திரு. ஆர்.எம்.பீ.ஆர். பண்டார (2014.10.15 இருந்து) |
| | : திரு. டீ.வீ.கே. நந்தசிறி 92014.10.15 இருந்து) |
| நிர்வாக அலுவலர் | : : திரு. டீ.எம்.குனபால (2014.02.04 வரை) |
| | : திருமதி. ஏ.டப்.ஜீ. நந்தாவதி (2014.02.05 இருந்து 2014.11.09 வரை) பதில் |
| | : திரு. குனசிறி அதிகாரி (2014.11.19 இருந்து) க.பு. |
| கணக்கு அலுவலர் | : திரு. டபிள்யு.எம். தனபால |

| **விஸ்தரிப்பு நிலையம்** | **உப அலவலகம்** | **சேவை பிரிவு** |
|---|---|---|
| தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை பிரதேச விஸ்தரிப்பு நிலையம் போகஹமடித்த, ஹாலி-எல. தொலைபேசி இல : 055 - 2294363 | ஹாலி எல | லுணுகல<br>பஸ்ஸரை<br>வேபஸ்ஸவளை<br>ஹாலி எல<br>எட்டம்பிட்டிய<br>பதுளை |
| | பண்டாரவளை | ஹப்புத்தளை<br>பண்டாரவளை<br>லியன்கஹவல<br>எல்ல<br>பல்லகெட்டுவ<br>ஹல்துமுல்லை |
| | வெலிமட | வெலிமடை<br>பொரலந்த<br>லுணுவத்தை<br>பம்பரபாண |

# பிரதேச அலுவலகம் - கேகாலை
## விவசாய கட்டிடம்
## கச்சேரி வீதி, கேகாலை
## நிர்வாக மாவட்டங்கள் - கேகாலை, கம்பஹா

**தொலைபேசி இல :- 035- 7201254/ 035-7201243**
**தொலைநகல் :- 035- 2230163 / மின்னஞ்சல் - tshdake@gmail.com**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. பீ.ஏ.டப். நிமல்கொட |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. கே.ஏ.பீ. பத்மராசா |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. டீ.எம்.ஜீ.எஸ். ஏக்கநாயக்க |
| | : | : திரு. டப்.ரீ.ஆர்பீ. விமலரத்ன(2014.08.04 வரை) |
| | : | திரு. டீ.எஸ். ரணவீர (2014.10.15 இருந்து) |
| நிர்வாக அலுவலர் | : | திருமதி. ஈ.எம்.டீ. அமுனுகம (2014.09.15 இருந்து) |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. பீ..ஜீ.ஐ. சுரங்கிகா) |

| **விஸ்தரிப்பு நிலையம்** | **உப அலவலகம்** | **சேவை பிரிவு** |
|---|---|---|
| தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை பிரதேச விஸ்தரிப்பு நிலையம் ஹிங்குல | தரணியகல | தரணியகல<br>நூரி<br>யட்டியந்தோட்டை<br>தெஹியோவிட்ட<br>ருாலிபொட<br>திக்எல்ல |
| | கேகாலை | கேகாலை<br>அரநாயக்க<br>புலத்கொஹுபிட்டிய<br>வலல்பொல<br>கித்துல்கல |

## பிரதேச அலுவலகம் - களுத்துறை
## தடுகொடயாவத்தை வீதி, இந்தகொட
## மத்துகம
## நிர்வாக மாவட்டங்கள் - களுத்துறை, கொழும்பு

தொலைபேசி இல :- 034- 7200183/ 034-7201630
தொலைநகல் :- 034- 2249690 / மின்னஞ்சல் - tshdakalu@gmail.com

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளார் | : | திரு. பீ.ஜீ. சோமசிறி (பதில்) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. ஆர்.ஏ.பீ.ஜீ. ரணசிங்க (2014.07.15 இருந்து) பதில் |
| | : | திரு. டப்.ரீ.ஆர்.பீ. விமலரத்ன (2014.08.05 இருந்து) |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. ஆர்.ஏ.பீ.ஜீ. ரணசிங்க (2014.07.15 இருந்து) |
| | : | திரு. ஏ.ஏ.டீ.பீ. அபேதிலக்க |
| | : | ஆர்.எம்.ஏ.டீ. ரத்நாயக்க (2014.10.15 இருந்து) |
| | : | எம்.எம். சந்திரபால (2014.10.14 வரை) பதில் |
| நிர்வாக அலுவலர் | : | திருமதி. என்.வீ. ப்ரீதி புஷ்பகுமாரி (2014.06.31 வரை) பதில் |
| | : | திருமதி. பீ.கே. சந்திரலதா (2014.08.06 இருந்து)க.பு. |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. ஆர்.ஏ.சீ.டீ.டீ. ஜயதுங்க |

| விஸ்தரிப்பு நிலையம் | உப அலவலகம் | சேவை பிரிவு |
|---|---|---|
| | மீகஹதென்ன | மீகஹதென்ன<br>யட்டபாத்த<br>பெலவத்தை<br>இத்தபான<br>பந்துரலிய<br>ஹடிகல்ல |
| | ஹொரணை | ஹொரணை<br>புலத்சிங்கள<br>மஹகம<br>மத்துகம<br>அகலவத்தை<br>கெலின்கந்த |

### ரத்னசிறி விக்கிரமநாயக்க தேசிய பயிற்சி நிலையம்
### 5 ஆம் கம்பம்
### ஊடவெல, ஹந்தான

தொலைபேசி இல :- 034- 7200183/ 034-7201630
தொலைநகல் :- 034- 2249690 / மின்னஞ்சல் - tshdakalu@gmail.com

| | | |
|---|---|---|
| முகாமையாளர் (பயிற்சி) | : | திரு. கே.ஏ.பீ.தஏ.ராஜபக்ஷ (2014.04.30வரை) க.பு. |
| | | (2014.04.30 இருந்து) பதில் |
| பயிற்சி அலுவலர் | : | திரு. எஸ்.சீ.ஈ. நாரங்கஸ்பிட்டிய |

**அகில இலங்கை தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. நெவில் ரத்நாயக்க | - | கௌரவ தலைவர் |
| திரு. கே.எல். குணரத்ன | - | கௌரவ செயலாளர் |
| திரு. என்.எம்.ஆர். ஜயதிலக்க | - | கௌரவ பொருளாளர் (Treasurer) |
| திரு. ஜே.எம்.பீ..ஜே. பண்டார | - | கௌரவ பிரதித் தலைவர் |
| திரு. கே. வீரசிங்க | - | கௌரவ பிரதிச் செயலாளர் |

**01. காலி - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. பீ.எச். சுசந்த டி சில்வா | - | கௌரவ தலைவர் |
| திரு. ரீ.எச். ரிச்சர்ட் | - | கௌரவ செயலாளர் |
| திரு. எம்.ஏ.ஆர். குணவர்த்தன | - | கௌரவ பொருளாளர் |

**02. மாத்தறை - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. நெவில் ரத்நாயக்க | - | கௌரவ தலைவர் |
| திரு. கே. வீரசிங்க | - | கௌரவ செயலாளர் |
| திருமதி டபிள்யூ ஜீ ஹேமா | - | கௌரவ பொருளாளர் |

**03. களுத்துறை - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. திரு. கே.எல். குணரத்ன | - | கௌரவ தலைவர் |
| திரு. கே.ரீ. பியதாச | - | கௌரவ செயலாளர் |
| திரு. யசபால குணவர்த்தன | - | கௌரவ பொருளாளர் |

**04. இரத்தினபுரி- தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. ஜே.எம்.பீ..ஜே. பண்டார | - | கௌரவ தலைவர் |
| திரு. ஜகத் செனரத் பத்திரண | - | கௌரவ செயலாளர் |
| திரு. ஓ.கே. ரத்னதிலக்க | - | கௌரவ பொருளாளர் |

**05. கேகாலை - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. பீ.ஆர்.ஏ. ரத்நாயக்க | - | கௌரவ தலைவர் |
| திரு. என்.எம்.ஆர். ஜயதிலக்க | - | கௌரவ செயலாளர் |
| திரு. எச்.டீ. அநுர ஜயரத்ன | - | கௌரவ பொருளாளர் |

**06. கண்டி - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. பீ.ஜி. அபேசிங்க | - | கௌரவ தலைவர் |
| திரு. டப். டீ. ஜயரத்ன | - | கௌரவ செயலாளர் |
| திரு. ஆர். ரி. குருசிங்க | - | கௌரவ பொருளாளர் |

**07. நுவரெலியா - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு .டப்.ஆர்.எஸ். கருணாரத்ன | - | கௌரவ தலைவர் |
| திரு. டீ.ஜி.எஸ்.பீ. பியசேன | - | கௌரவ செயலாளர் |
| திரு. பீ.கே. சோமரத்ன | - | கௌரவ பொருளாளர் |

**08. ஊவா - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. ஆர்.எம். குணசேகர | - | கௌரவ தலைவர் |
| திரு. எச்.எம். தயானந்த | - | கௌரவ செயலாளர் |
| திரு. ஏ.எம். குணரத்ன | - | கௌரவ பொருளாளர் |

# பொழிப்பு

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் விஸ்தரிப்பு

2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்களின் புள்ளிவிபரத் தரவுகளுக்கேற்ப கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் தவிர, மதிப்பிடப்பட்ட மொத்த தேயிலை நிலங்களின் பரப்பளவு 125,019 ஹெக்ரயார்கள் (20 பேர்ச்சஸ்களுக்குக் குறைந்த காணிகள் அடங்கலாக) ஆகும். கடந்த ஒரு தசாப்தகாலத் தரவுகளின் படி, மானிய உதவியைக் கொண்டு வருடாந்தம் தேயிலை மீள்பயிரிடுகைக்காக ஏறத்தாழ 1034 ஹெக்ரயார் நிலங்களில் களை பிடுங்கப்பட்டும், 931 ஹெக்ரயார் நிலங்களில் வருடந்தோறும் தேயிலை மீள் பயிரிடப்பட்டும் வருகின்றன. கடந்த 03 ஆண்டுகளின் வளர்ச்சியை உற்றுநோக்கும் போது, வருடாந்தம் ஏறத்தாழ 1028 ஹெக்ரயார் நிலங்களில் களை பிடுங்கப்பட்டும், ஏறக்குறைய 925 ஹெக்ரயார் நிலங்களில் தேயிலை மீள் பயிரிடப்பட்டும் வந்துள்ளன. விவசாயிகள் வருடாந்தம் நிறுவனத்தின் மானிய உதவிகளின்றியும் தேயிலையை மீள் பயிரிடுவதற்கும் இன்னும் புதிதாகத் தேயிலையை நடுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், உற்பத்தியாகும் தேயிலைக்கும் மாற்றுப் பயிர்களுக்கும் கவர்ச்சிகரமான சந்தை விலையைப் பெற்றுக் கொள்வதற்கும், தேயிலையுடன் இடைப் பயிர்களை நடுதல், குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள் மற்றும் உரிய காலத்தில் நிகழும் சாதக மற்றும் பாதக விளைவுகளைப் பொறுத்து வருடாந்தம் இந்த வளர்ச்சி வீதப் போக்கில் தளம்பல்நிலை காணப்படுவதை அவதானிக்க முடியும். 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு தொடர்பாக தேயிலைப் பரிசோதகர்கள் / தேயிலை விஸ்தரிப்பு அலுவலர்கள் ஆகியோர் வினாக்கொத்து ஒன்றின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஏறக்குறைய 882 விவசாயிகள் தேயிலைப் பயிர் செய்கையில் புதிதாக ஈடுபட்டுள்ளனர்.

அத் தகவல்களின் அடிப்படையில் மானிய உதவியின்றி 490 ஹெக்ரயார் நிலப் பரப்புக்களில் புதிதாக தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. அதே போன்று அதிக நிலப்பரப்பில் அதாவது 216 ஹெக்ரயார் நிலப்பரப்பில் மாத்தறை மாவட்டத்திலும், 72 ஹெக்ரயார் நிலப்பரப்பில் இரத்தினபுரி மாவட்டத்திலும், 66 ஹெக்ரயார் நிலப்பரப்பில் களுத்துறை மாவட்டத்திலும், 20 ஹெக்ரயார் நிலப்பரப்பில் காலி மாவட்டத்திலும் தேயிலை புதிதாக பயிரிடப்பட்டுள்ளன. அதற்கமைய 2014 ஆண்டின் இறுதியில் தேயிலை பயிரிடல் தொடர்பாக மதிப்பிடப்பட்ட முழுமொத்த தேயிலை சிறு பற்றுநில நிலப்பரப்புக்கள் 121,429 ஹெக்ரயர்கள் ஆகும்.

### தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை உற்பத்தியும் தேசிய உற்பத்திக்கான அதன் பங்களிப்பும்

கடந்த ஒரு தசாப்த காலத்தினுள் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தியை 205.8 மில்லியன் கிலோவில் இருந்து 247.4 மில்லியன் கிலோ வரை அதாவது 41.6 மில்லியன் கிலோ வரை அதிகரித்துக் கொள்வதற்கு முடிந்துள்ளது. அக் காலஎல்லையினுள் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு 64.9% இலிருந்து 73.1% வரை அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.9 மில்லியன் கிலோ அல்லது 0.8 % வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

### தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தித்திறன்

தேசிய உர மானியத்துடன் திறந்த சந்தையின் விலைத் திட்டத்தின் கீழ் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு உரத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தமையினால் 2014 ஆண்டிலும், தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தியைப் போன்று பொதுவாக நோக்கும் போது உற்பத்தித்திறனும் அதிகரித்தள்ளது. அதாவது சாதாரணமாக வருடாந்த உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு / முடிவுப் பொருளான தேயிலை 2107 கிலோ கிராமில் இருந்து 2123 கிலோ கிராம் வரை அதாவது 0.8% ஆல் அதிகரித்துள்ளது. 2013 ஆண்டுக்கு நிகராக மலைநாடு 15% வீதத்தாலும், தாழ்நிலம் 1.3% வீதத்தாலும் அதிகரித்துள்ளது. மத்திய மலைநாட்டு உற்பத்தி 8% வீதத்தர் குறைவடைந்திருந்தது. பொதுவாக தாழ்நில உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு/முடிவுப் பொருளான தேயிலை 2227 கிலோ கிராமில் இருந்து 2256 கிலோ கிராம் வரை அதாவது 1.3% வீதத்தால் அதிகரித்துள்ளது.

## தேயிலை மீள் பயிரிடல் நிலப்பரப்பும் தேயிலை மீள் பயிரிடல் விகிதமும்

தேசிய கொள்கைக்கு இணங்க, ஆகக் கூடிய அறுவடையைப் பெறுகின்ற தேயிலை நிலப்பரப்புக்களை மேலும் பேண வேண்டுமாயின் தற்பொழுது இருக்கின்ற 2% வீத தேயிலை உற்பத்தி நிலப்பரப்புக்களில் வருடாந்தம் தேயிலை மீள் பயிரிடப்படல் வேண்டும். புள்ளிவிபரத் தகவல்களின் படி தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையில் வளர்ந்த தேயிலைச் செடிகள் காணப்பட்ட நிலப்பரப்புக்களின் அளவு 116,492 ஹெக்ரயாாகள் ஆகும். மேலும், 21,613 ஹெக்ரயார் காணிகள் ஏற்கனவே 25 ஆண்டுகளாக பயிரிடப்பட்டு வந்த நிலங்களாகும். இதனை இயன்றளவில் துரிதமாக மீள் பயிரிடலில் ஈடுபடுத்த வேண்டியது அத்தியாவசியமாகும். தேசிய தேவைப்பாட்டுக்கு அமைய 2300 ஹெக்ரயார் நிலப்பரப்பில் வருடாந்தம் மீள்பயிரிடப்படல் வேண்டும். 2014 ஆம் ஆண்டின் தேயிலை மீள் பயிரிடல் இலக்காக கொள்ளப்பட்ட நிலப்பரப்பு 1125 ஹெக்ரயார் ஆக இருந்ததுடன், அதில் மீள் பயிரிடப்பட்ட நிலப்பகுதி 720 ஹெக்ரயார் ஆகும். அதற்கமைய 2013 ஆண்டில் 0.93 ஆக காணப்பட்ட தேயிலை மீள் பயிரிடப்பட்டுள்ள விகிதம் 2014 ஆண்டில் 0.64 ஆக இருந்தது

## பயிர் புனர்ஜீவனம்

தேயிலை கத்தரித்தல், மண் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல், நிழலாக்கல் போன்ற நடவடிக்கைகளுடன் வெற்றிடங்களில் இடைநடுகை ஆகிய பணிகளை ஒன்றிணைந்தவாறு மேற்கொள்ளும் பொருட்டு சிபார்சு செய்யப்பட்டுள்ளவாறு, பயிர் புனர்ஜீவன ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஊக்குவிப்புத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பவர்களின் தொகை 30 % வீதத்தாலும், விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் முன்னேற்றம் 27% வீதத்தாலும் குறைவடைந்துள்ளது. பயிரிடப்பட்ட செடிகளின் எண்ணிக்கை 0.271 மில்லியன் செடிகளாகும். இது 2013 ஆண்டுடன் ஒப்பிடும் போது 46 % ஆல் குறைவடைந்துள்ளது. வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பிரகாரம் இலக்காகக் கொள்ளப்பட்ட தேயிலைச் செடிகளின் எண்ணிக்கை 0.80 மில்லியன் செடிகளாகும்.

## விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகள்

ஆண்டினுள் அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்கு 6854 ஆக இருந்தது. வருடாந்த திட்டத்தில் மண் முகாமைத்துவத்தினை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு உற்பத்தித்திறன் விருத்தி தொடர்பான விசேட நிகழ்ச்சிட்டங்களும் அமுல்படுத்தப்பட்டமையால், மண் பாதுகாப்பு குறித்த மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்பாடு 7064 வரை அதாவது 3 % அதிகரித்திருந்ததுது.

அவ்வாறே 2014 ஆம் ஆண்டில் விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் 315973 விவசாயிகள் கலந்து கொண்டனர். எனினும் ஆண்டில் 167559 விவசாயிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. மண் முகாமைதிதுவ நிகழ்ச்சித்திட்டத்தில் 17460 விவசாயிகள் கலந்து கொள்வார்க தொடர்பான விசேட நிகழ்ச்சித்திட்டமும் இடம்பெற்றதனால் இவ் எண்ணிக்கை 117644 வரை அதாவது 100194 ஆல் (574 % வீதத்தால் ) அதிகரித்திருந்தது.

அதற்கமைய, விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான மொத்த விவசாயிகளின் பங்கேற்பு 148414 ஆல் அதாவது 188 % வீதத்தால் அதிகரிப்பதற்கு மேற்படி விசேட நிகழ்ச்சித்திட்டம் காரணமாக அமைந்தது எனலாம்.

## தேயிலை சிறு பற்றுநில சங்கங்கள்

1989 ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கங்கள் சட்டரீதியான ஒரு அமைப்பு முறையாகும். 8 பிரதேச அமைப்புக்களையும், ஒரு அகில இலங்கை அமைப்பையும் கொண்டுள்ள அச் சங்க முறையின் கீழ் 2014 ஆண்டளவில் 1383 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அச் சங்கங்களிலுள்ள முழுமொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 266,480 ஆகும். 2013 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டின் சங்கங்களின் எண்ணிக்கை 01 ஆக அதிகரிகத்துள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 14686 ஆல் அல்லது 6% வீதத்தால் அதிகரித்துள்ளது.

**நிறுவகத்தின் செயற்பாட்டுக் கிரயம்**

2014 ஆண்டளவில் நிறுவகத்தின் அபிவிருத்திக் கிரயம் 345.104 மில்லியன் ரூபா ஆகும். மீண்டுவரும் செலவினம் 252.774 மில்லியன் ரூபா ஆகும். 2013 ஆண்டுடன் ஒப்பிடுகையில் அபிவிருத்திக் கிரயம் 94.951 மில்லியன் ரூபாவினால் குறைவடைந்துள்ளது. மீண்டுவரும் செலவினம் 13.951 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதற்கமைய செயற்பாட்டுக் கிரயத்துக்கும் அபிவிருத்தி கிரயத்துக்கும் இடையிலான விகிசாதாரம் 0.73 ஆக இருந்தது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டுக் கிரயம் 0.19 ஆல் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றது.

**தேயிலைப் பற்றுநில உரிமையாளர்களின் விகிதாசாரத்திற்கேற்ப தேயிலைப் பரிசோதகர்கள் / விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள்**

பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்கும் பொருட்டு விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களினதும் விவசாயிகளினதும் எண்ணிக்கை 1:1000 ஆக இருப்பினும், தேயிலை சிறு பற்றுநிலப் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தேயிலை பயிரிடலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் விகிதாசாரம் 1:2742 ஆகவே காணப்படுகின்றது. அதற்கமைய உள்ளடக்கப்பட வேண்டிய விவசாயிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமையால் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். எனினும், நிறுவனத்தின் நிதியேற்பாடுகள் மற்றும் செலவுகள் வரையறுக்கப்பட்டுள்ளமையைக் கவனத்திற்கொண்டு அவ்வாறு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாத போதும், அதற்குப் பதிலாக தேயிலை சிறு பற்றுநில சங்கங்கள் போன்ற சமூக அமைப்புக்களின் துணைச் சேவைகளிடமிருந்து ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பச்சைத் தேயிலைக்கான விலை**

2014 ஆண்டளவில் இலங்கைத் தேயிலைச் சந்தையில் பெற்ற விலைமனுக்களுக்கு அமைய பச்சைத் தேயிலை ஒரு கிலோவுக்கு ஆண்டிறுதியில் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு கிடைத்த பொதுவான பச்சைத் தேயிலை விலை அதாவது மலைநாடு தொடர்பாக 61.47 ரூபாவும், மத்திய மலைநாடு தொடர்பாக 59.98 ரூபாவும், தாழ்நிலப் பகுதிகள் தொடர்பாக 71.37 ரூபாவும் ஆக இருந்ததுடன், ஏனைய அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பொதுவாக 67.54 ரூபா ஆக இருந்தது. அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பொதுவான விலையின் படி 2014 ஆண்டில் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் உற்பத்திகளில் நேர் பெறுமானத்தைக் காட்டியது.

# அறிமுகம்

## 1. அறிமுகம்

### 1.1. நிறுவனமும் தொழிற்பாடும்

தேசிய பொதுச் சபையின் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி சபையின் கீழ், 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டது.

அதன் பிற்பாடு, பிரதான பட்டயத்தில் திருத்தங்களை ஒன்றிணைத்து 1991 இன் 36 ஆம் இலக்க சட்டம், 1997 இன் 21 ஆம் இலக்க சட்டம், 2003 இன் 34 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2006 இன் 42 ஆம் இலக்க சட்டம் ஆகியன சட்டங்களாக்கப்பட்டுள்ளன.

**குறிக்கோள்கள்:**
தேயிலை சிறு பற்றுநிலங்களை அபிவிருத்தி செய்தல், உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், கொழுந்து விற்பனை நடவடிக்கைகள் மற்றும் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் நலன்களைப் பேணுதல் என்பன இந் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

**அதிகாரசபையின் தொழிற்பாடுகள்**

1. தேயிலை சிறு பற்றுநிலங்களினதும் தமக்கென்று சொந்தமான உற்பத்தி வழிவகை அற்ற ஏனைய தேயிலை பற்றுநிலங்களினதும் அபிவிருத்திக்கு ஒத்துழைத்தல் அல்லது அபிவிருத்தி செய்வதைப் பொறுப்பேற்றல்.

2. அத்தகைய தேயிலை நிலங்களின் தேயிலை உற்பத்திற்குக் தேவையான ஏனைய வசதிகளையும் இன்னும் தேயிலைத் தொழிற்சாலைகளையும் சுவீகரித்தல், அல்லது அபிவிருத்தி செய்தல்.

3. அத்தகைய தேயிலைத் நிலங்களில் அல்லது தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளின் சந்தைப்படுத்தப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல் அல்லது விற்பனையை பொறுப்பேற்றல்

4. அத்தகைய தேயிலை நிலங்களையும் தொழிற்சாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல் அல்லது அத்தகைய வசதிகளையும் சேவைகளையும் பெற்றுக் கொடுத்தல் இன்றேல் அவற்றை இலகுவாக்குவது தொடர்பாகவும், அந் நிலங்களின் உற்பத்தி, பொதியிடல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு நியதிச்சட்டத்திற்கு அமைவான உரிமைகளையும், பணிக் கொடைகளையும் வழங்குவது உட்பட அவர்களது நலன்களுக்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

5. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அவ்வாறான சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்குதலும், அவ் விடயங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை தயாரிப்பதற்கான விதிமுறைகளை வகுத்தலும்.

6. தேயிலை சிறு பற்றுநிலங்களின் முதலீடுகளை மேம்படுத்தல்

7. தரவுகளைச் சேகரித்தல், விநியோக நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் தேயிலை சிறு பற்றுநிலங்களின் அபிவிருத்தி திறனை ஆராய்தல்

8. உசிதமான கொள்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல் மற்றும் ஏனைய பிற முகவர் நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இல. 02, 03 மற்றும் 04 ஆகியவற்றின் தொழிற்பாடுகளை தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையின் சட்டத்திலிருந்து நீக்குவதற்கும் பிற பணிகளை பதிலீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து இலங்கை தேயிலைச் சபையினால் அடிக்கடி விதிக்கப்பட்ட பணிகள் மற்றும் ஏனைய உரியதான கீழே குறிப்பிடப்பட்டுள்ள இன்னபிற பணிகளும் உள்ளடங்குமாறு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1. **தனியார் துறையின் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள காணிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள உதவியளிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

   i. தேயிலை மீள் பயிரிடல் ii. புதிதாக நடுதல் iii. இடைநடுகை

2. தேயிலை உரம் பகிர்ந்தளித்தல், பெருந்தோட்டப் பொருட்கள், உபகரணங்கள் போக்குவரத்து வதிகளை வழங்குதல் ஆகிய துணைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

3. விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

### 1.2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிகள்

மீளாய்வு ஆண்டினுள் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இக் குழுவினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயசார் துறைகள் சம்பந்தமான ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. நடப்பாண்டின் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை விசாரணைக்கு உட்படுத்தி அங்கீகரித்தல்

2. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக அறியப்பட்ட விடயங்கள் மீளாய்வுக்குட்படுத்தல், பிரேரணைகளை அமுல்படுத்துவதை துரிதப்படுத்தல்.

3. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை மீளாய்வு செய்தலும், அதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறைகள் மீளவும் ஏற்டாதவாறு தடுப்பதற்குத் தேவையான சரிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4. கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விடைகளை சமர்ப்பித்தல் சம்பந்தமான முன்னேற்றத்தை பரிசீலித்தல்.

5. ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், உள்ளக நிதிக் கூற்றுக்கள் ஆகியனவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் செயலாற்றுகையின் அடிப்படையிலான இலக்குகளை எய்துவதற்கான மதிப்பீடு செய்தல்.

6. முடிவடைந்த கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை என்பனவற்றை குறித்த காலஎல்லையில் சமர்ப்பிப்தை உறுதிப்படுத்தல்
7. மனித வளங்கள், ஏனைய பிற வளங்களின் நிர்வாகம் மற்றும் அவை சார்ந்த அபிவிருத்திப் பணிகளின் மீளாய்வு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
8. பணியாட்தொகுதியினரின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்த விடயங்களை மீளாய்வு செய்தல், நிறுவகச் செலவுகளை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து விளக்கமளித்தல்
9. தற்போதுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பது பற்றி விசாரணை செய்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளல்

   2014 ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம் 2014.03.20 ஆந் திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், 2014.03.26 ஆந் திகதி பணிப்பாளர் சபையினாலும் அங்கீகாரமளிக்கப்பட்டது.

   கணக்காய்வு பரிசீலனைகள் மேற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றின் கீழ் தயாரிக்கப்பட்ட 13 கணக்காய்வு பரிசீலனைகள் மற்றும் 07 ஏனைய பரிசீலனைகளும் 2014 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

   கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக நிர்வாகப் பிரிவினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் காலக்கிரமத்தில் கணக்காய்வு குழு பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 1.3. நிர்வாகம்சார் பணிகள்

### 1.3.1. நிறுவகக் கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதி பற்றி 63 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழியர்களின் முழுவிபரங்களும் 64 பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அவ் ஊழியர்களின் வயதெல்லை மற்றும் கல்வித் தகைமைகளுடன் பூரண விபரங்கள் 65 மற்றும் 66 ஆம் பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள நியமனங்கள**

| பதவிகள் | தரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| பொது முகாமையாளர் | HM 2-1 | 01 |
| உதவி முகாமையாளர் (விஸ்தரிப்பு) | MM 1-1 | 01 |
| உதவி முகாமையாளர் (நிதி) | MM 1-1 | 01 |
| உதவி முகாமையாளர் (மனிதவள மற்றும் கட்டுப்பாடு) | MM 1-1 | 03 |
| உதவி பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | MM 1-1 | 01 |
| நிர்வாக அலுவலர் | JM 1-1 | 02 |
| பொறுப்பான அலுவலர் | JM 1-1 | 10 |
| தேயிலை பரிசோதக விஸ்தரிப்பு அலுவலர்கள் | MA 2-2 | 15 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம் சாராத) | MA 1-2 | 13 |
| தேயிலை நாற்றுமேடை பணியாளர் | MA 1-2 | 01 |
| சாரதி | PL -3 | 03 |
| அலுவலக பணியாளர் | PL -1 | 03 |
| தொழிலாளர் | PL -1 | 08 |
| **மொத்தம்** | | **65** |

### 1.3.2. நியதிச்சட்ட நோக்கங்களை எய்துவதற்கான முகாமைத்துவ அணுகுமுறை மூலோபாயங்கள்

நியதிச்சட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடலின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்ட வருவதுடன், அவ் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவ மூலோபாங்களின் கீழ் 2010 ஆண்டு தொட்டு இது வரை இற்றைவரையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் போது, நிறுவகத்தின் நீண்டகால அடைவு ''தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்'' என இனங்காணப்பட்டது.

அதற்கமைய 2014 ஆண்டுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மத்தியகால பெறுபேற்றை அடைந்து கொள்ளுமுகமான ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**அபிவிருத்திசார் அடைவுகள்**

நீண்டகால தாக்கங்கள் / அடைவுகள் – தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

**மத்தியகால அடைவுகள்**

1. 06 ஆண்டுகளுள் ஒரு ஆண்டுக்கு/ஒரு ஹெக்ரயாருக்கு/ தயாரிக்கப்பட்ட தேயிலை / கிலோ

    தாழ்நிலம் 2700 வரை
    மத்திய மலைநாடு 1700 வரை
    ஊவா 1500 வரை அதிகரிப்பது

2. ஐந்து (5) ஆண்டுகளில் தொழிற்சாலை மட்டத்தில் பச்சைக் கொழுந்தின் தரத்தை 60 % வரை அதிகரிப்பது
3. ஆறு (06) ஆண்டுகளுள் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை 50 % வீதத்தால் வலுப்படுத்தல்
4. ஒரு ஆண்டினுள் சிறப்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நிறுவனத்தை வலுவூட்டுதல்
5. ஐந்து (05) ஆண்டுகளுள் தேயிலை நிலங்களை 10 % வீத மேலதிக வருமானமீட்டும் வகையில் ஈடுபடுத்தல

# 2. இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள்

**2.1. தேயிலை சிறு பற்றுநிலங்கள் :**

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம், “10 ஏக்கருக்குக் குறைந்த தேயிலைத் தோட்டங்கள் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள்” என கருதப்படுகின்றன. எனினும், இலங்கை தேயிலைச் சபையின் கீழ் உள்ள 10 - 50 ஏக்கர் வரையான தேயிலைத் தோட்டங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் 1978 சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையிடம் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய தனியார் உரித்துடைமையின் கீழ் உள்ள 50 ஏக்கருக்குக் குறைந்த அனைத்து தேயிலை நிலங்களினதும் அபிவிருத்தி தொடர்பாக உரிய துணைச் சேவைகள் நிறுவனத்தினால் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

2012 ஆம் ஆண்டளவில் 10 ஏக்கரில் இருந்து 50 ஏக்கர் வரையான தேயிலை நிலங்கள் தொடர்பாக காணி அபிவிருத்தி சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை சபையிடமும், விஸ்தரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 2012 ஆம் ஆண்டில் இருந்து சட்டத்தில் நிலவுகின்ற நிதி ஏற்பாடுகளின் படி, 10 ஏக்கருக்கு குறைந்த தேயிலை நிலங்கள் தொடர்பாக மாத்திரம் அவற்றின் அபிவிருத்தி மற்றும் அது குறித்த துணை சேவைகள் நிறுவத்தினால் வழங்கப்படுகின்றது.

**2.2. தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்புக்கள் :**

| நுவரெலியா | 6 | 60 | 60 | 6 | 6 | 6 | 6 | 60 | 6 | 12 | 60 |
| பண்டாவளை | 5 | 50 | 50 | 5 | 5 | 5 | 5 | 50 | 5 | 10 | 50 |
| கேகாலை | 5 | 50 | 50 | 5 | 5 | 5 | 5 | 50 | 5 | 10 | 50 |
| களுத்துறை | 5 | 50 | 50 | 5 | 5 | 5 | 5 | 50 | 5 | 10 | 50 |
| மொத்தம் | 50 | **500** | **500** | **50** | **50** | **50** | **50** | **500** | **50** | **100** | **500** |

தேயிலை பயிர் செய்கையின் போது இயந்திரத் தொகுதிப் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டம் - பொறித்தொகுதியின் வழங்கல் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு ( நிதிசார் தகவல்கள்)

உபகரணங் பெறுமானம் (රු.000')

| பிரதேச அலுவலகம் | பயன்பெறும் சங்கங்களின் எண்ணிக்கை | கொழுந்து வெட்டும் கத்தரி | கொழுந்து கூடை | கொழுந்த பறிக்கும் பொறி | | எரிபொருள் வலுவினால் இயங்குகின்ற | | ஏப்ரன் | ஓவரோல், கெப் தொப்பி | கென்வஸ் சப்பாத்துச் சோடி | மொத்தச் செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | பற்றரி வலு | எரிபொருள் வலு | கத்தரிப்பு பொறி | குழி தோண்டும் பொறி | | | | |
| காலி | 8 | 111 | 68 | 330 | 524 | 431 | 638 | 44 | 26 | 100 | 2272 |
| மாத்தறை | 7 | 97 | 59 | 289 | 458 | 377 | 559 | 39 | 22 | 88 | 1988 |
| இரத்தினபுரி | 8 | 111 | 68 | 330 | 524 | 431 | 638 | 44 | 26 | 100 | 2272 |
| கண்டி | 6 | 83 | 51 | 247 | 393 | 323 | 479 | 33 | 19 | 75 | 1704 |
| நுவரெலியா | 6 | 83 | 51 | 247 | 393 | 323 | 479 | 33 | 19 | 75 | 1704 |
| பண்டாவளை | 5 | 69 | 42 | 206 | 327 | 270 | 399 | 28 | 16 | 63 | 1420 |
| கேகாலை | 5 | 69 | 42 | 206 | 327 | 270 | 399 | 28 | 16 | 63 | 1420 |
| களுத்துறை | 5 | 69 | 42 | 206 | 327 | 270 | 399 | 28 | 16 | 63 | 1420 |
| மொத்தம் | **50** | **694** | **424** | **2062** | **3272** | **2695** | **3990** | **275** | **160** | **627** | **14198** |

**தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை**
**2014 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று**

(ரூ'000)

| | அட்டவணை இல. | | 2014 | | 2013 |
|---|---|---|---|---|---|
| <u>சொத்துக்கள்</u> | | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 7 | 75,256 | | 27,403 | |
| பெறுவனவுகள் | 4,5 | 118,817 | | 118,970 | |
| பொருட் பதிவேடு | 3 | 15,662 | | 15,391 | |
| முற் கொடுப்பனவுகள் | 6 | 800 | | 461 | |
| பிற நடைமுறைச் சொத்துக்கள் | 2A | <u>6,145</u> | 216,680 | <u>5,412</u> | 167, 638 |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | | | | |
| முதலீடுகள் ( நிலை. வைப்பு.) | 2 | | 9,993 | | 8,962 |
| பிற நிதிச் சொத்துக்கள் | 2A | | 3,935 | | 2,028 |
| ஆதனம், பொறியும் பொறித்தொகுதியும் | 1 | 349,362 | | 343,147 | |
| கழிக்குக : தேய்மானக் கணக்கு | | <u>(92,586)</u> | <u>256,776</u> | <u>74,702</u> | <u>268,444</u> |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **487,385** | | **447,073** |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கொடுமதிகள் | 8 | 54,536 | | 22,266 | |
| அட்டுறு செலவுகள் | 9 | <u>145,045</u> | 199,581 | <u>261,690</u> | 283,956 |
| **நடைமுறைசாரா பொறுப்புக்கள்** | | | | | |
| அலுவலர்நலன்(பணிக்கொடை) | 10 | | <u>139,450</u> | | <u>130,005</u> |
| முழுப் பொறுப்புக்கள் | | | **<u>339,031</u>** | | **<u>413,961</u>** |
| தேறிய சொத்துக்கள் | | | **<u>148,354</u>** | | **<u>33,112</u>** |
| **தேறிய சொத்துக்கள்/ பங்குகள்** | | | | | |
| அரசினால் வழங்கப்பட்ட மூலதன. | 01A | 25,220 | | 19,830 | |
| மீள்மதிப்பீட்டு மிகை | 01B | 124,109 | | 124,109 | |
| அட்டுறு மிகை/ (பற்றாக்குறை) | | <u>(61,574)</u> | 87,755 | <u>(269,702)</u> | (125,763) |
| மானியம் | 01C | | 60,599 | | 158,875 |
| **மொத்த தே. சொத்./ பங்குகள்** | | | **<u>148,354</u>** | | **<u>33,112</u>** |

இல. 03 இலிருந்து 04 வரையான பக்கங்களின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இல. இல. 07 இலுருந்து 23 வரையான பக்கங்களின் குறிப்புக்கள் இந் நிதிக்கூற்றுக்களின பிரதான பங்காக தயாரிக்கப்பட்டுள்ளது. இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து, சமர்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபையிடம் ஒப்டைக்கப்பட்டுள்ளது. இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்டு, அதற்கான கையொப்பமும் கீழே இடப்பட்டுள்ளன

| | | | |
|---|---|---|---|
| …………...………… | .................................. | ..................................... | .......................................... |
| ( பதில. தலைவர்) | (பணிப்பாளர்) | (பொது முகாமையாளர்) | (நிதி முகாமையாளர் |

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை
## 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடைந்த ஆண்டுக்கான
## நிதிச் செயலாற்றம்

ரூ.'000

| | அட்ட. இல. | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு அரசிறை** | | | | | |
| கூட்டிணைந்த நிதி | | | | | |
| குறித்த ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற நிதி | | | 734,994 | | 505,063 |
| **ஏனைய வருமானம்** | 15 | | | | |
| வட்டி – C / D | | 1,684 | | 2,726 | |
| ஊழியர் கடன் மீதான கடன் வட்டி | | 3,874 | | 3,450 | |
| நானாவித வருமானம் | | 4,162 | | 3,238 | |
| நாற்றுமேடைகள் மீதான மிகை (பற்றாக்குறை) | 17 | 52 | | 167 | |
| செலவை விஞ்சிய வருமானம் - ஹந்தானை | | 1,957 | 11, 730 | 1,797 | 11, 378 |
| | | | 746,724 | | 516,441 |
| **அபிவிருத்திச் செலவுகள்** | | | | | |
| நிவாரண உதவு தொகைகள் | 13 | (331,213) | | (431,451) | |
| விஸ்தரிப்புச் செலவினம் | 14 | (9,284) | | (3,660) | |
| சமூக அபிவிரு. செலவுகள் | 13 | (1,335) | | (1,960) | |
| நிறுவக அபிருத்தி | | (3,272) | | (2,991) | |
| | | | (345,104) | | (440,062) |
| **செயற்பாட்டுச் செலவினம்** | 12 | | | | |
| தனியாள் வேதனாதிகள் | | | | | |
| சம்பளம், கொடுப்பனவு, ஊசேநி., ஊ.நபொநி. | | (196,113) | | (186,446) | |
| மேலதிக நேர/ அரைநாள் படி | | 2,669) | | (2,055) | |
| பிரயாணச் செலவுகள் | | (8,543) | | (7,562) | |
| விநியோகம் மற்றும் நுகர்வுப்பொருட்கள் | | (3,420) | | (3,252) | |
| பராமரிப்பு | | (15,690) | | (14,813) | |
| தொடர்பாடல் | | (4,535) | | (3,943) | |
| வட்டி, வாடகை மற்றும் மின்சாரம் | | (5,795) | | (5,638) | |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | | (16,047) | | (16,754) | |
| **மொத்தசெயற்பாட்டு செலவினம்** | | | (252,812) | | (238,462) |
| செயற்பாட்டுப் பணி. மிகை /பற்றாக்குறை | | | 148,808 | | (162,083) |
| பணிக்கொடை | | (23,408) | | (25,023) | |
| தேய்மானமும் கழிவும் | | (19,215) | | (18,316) | |
| கடன்பெறுநர்களிடமிருந்துஅறவிடமுடியாக் கடன் / பதிவ. | | (76) | (42,699) | (2,063) | (45,402) |
| | | | (106,110) | | (207,485) |
| ஆதனம்,பொறி, பொறித்தொகுதி விற்பனை இலாபம் | | | | | |
| IFAD மற்றும் திவிநெகும – மீண்டுவரும் மானியம் | 14 | (455,053) | 0 | (40,241) | |
| மீண்டுவரும் செலவினம் | | (455,053) | | (40,241) | |
| அதி விசேட உருப்படிகளுக்கு முன்னரான தேறிய மிகை /(பற்.) | | | 106.110 | | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கம் | | | 1,185 | | 151 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | | 100,833 | | 19,492 |
| **குறித்த காலப் பகுதிக்கான தேறிய மிகை / (பற்.)** | | | **(208,128)** | | **(187,842)** |

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூ.'000 | |
| **செயற்பாட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | | |
| **பொதுவான பணிகளின் மிகை (பற்றாக்குறை)** | 208,128 | (187, 842) |
| **பணம் அல்லாதவைகள்** | | |
| தேய்மானம் | 18,067 | 18,316 |
| பணிக்கொடை நிதியேற்பாடுகள் | 23,408 | 25,023 |
| சந்தேகத்திற்கிடமான கடன்நிதியேற்பாடுகளை அதிகரித்தல் | 76 | 2,063 |
| பதிவழிக்கப்பட்ட கடன்பெறுநர் | (7) | (771) |
| வட்டி வருமானம் | (1,684) | (2,726) |
| செலுத்தவேண்டிய நிதி அகரித்தல் /குறைவடைதல் | (84,375) | 160,314 |
| மிள்மதிப்பீட்டு நட்டங்கள் | | |
| ஊழியர் கிரய அதிகரிப்புக்கான ஒதுக்கீடு | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி உபகரண விற்பனையின் மூலம்பெற்ற இலாபம் / நட்டம் | (14) | (54) |
| ஏனைய சொத்துக்கள் அதிகரித்தல் /குறைவடைதல் | (3,672) | (2,487) |
| வருமதிகள் அதிரித்தல் /குறைவடைதல் | 22 | (647) |
| பொருட் பட்டியல் அதிரித்தல் /குறைவடைதல் | (271) | 6,990 |
| **செயற்பாட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்** | 159,677 | 18,177 |
| **முதலீட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | | |
| பொறியும், பொறித்தொகுதியினதும் விற்பனையின் மூலம் பெற்ற வருமானம் | 6,450 | (18,385) |
| **முதலீட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்** | 19 | 55 |
| வட்டி | (6,450) | (18,330) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 1,476 | 1,949 |
| **முதலீட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | (13,964) | (10,920) |
| **நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | (12,488) | (8,972) |
| **மூலதன மானியங்கள்** | (98,276) | (4105) |
| **அரச பங்களிப்புக்கள்** | | |
| **நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | (5,390) | |
| **காசும் காசு ஒப்புரவுகளினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | (92,886) | (4,105) |
| **குறித்த காலஎல்லையின் ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | 47,853 | (13,230) |
| **குறித்த காலஎல்லையின் முடிவிலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | 27,403 | 40,633 |
| **நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | 75,256 | 27,403 |

## நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்

### 01. கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1 பொதுவானவை

### 1.1.1 கணக்கீட்டு அடிப்படை

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள், பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை

கணக்கீட்டு நியமங்களுக்கும் அமைவாகவே தயாரிக்கப்படுகின்றன. இந் நிதிக்கூற்றுக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க கிரயப் பிரமாணங்களின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இக் கணக்குகள் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துகின்ற பணவீக்க காரணிகளை கவனத்திற்கொண்டு அவற்றில் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை. உரியவாறு கையாளப்பட்டுள்ள திட்டவட்டமான கொள்கைகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

### 1.1.2 ஐந்தொகை தொடர்பான பின்கண்காணிப்பு

ஐந்தொகை தொடர்பாக குறித்த திகதிக்குப் பின்னரான முக்கியமான நிகழ்வுகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டு, தேவையான இடங்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

### 1.1.3 ஒப்பீட்டு ரீதியான எண்ணிக்கை

நடப்பாண்டின் கணக்குகளை சமர்ப்பிப்பது தொடர்பான மாற்றல்களுடன் பொருந்தும் வகையில் ஒப்பீட்டு ரீதியாக எண்ணிக்கைகைளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

### 1.1.4 அதிவிசேட விடயங்கள்

நடப்பாண்டினுள் உரம் கடனாகப் பெற்ற சில கடன்பெறுநர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தியுள்ளனர். அறவிட முடியாக் கடனை அறவிடும் முறையில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதுடன், இவ் ஆண்டு தொடர்பாக ஒதுக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் தொடர்பான நிதியேற்பாடு ரூபா 76 அகும். சில கடன்பெறுநர்களிடமிருந்து மீளக் கடனைப் பெற்றுக் கொள்ளவதிலுள்ள சந்தேகம் குறித்து குறிப்பிடப்பட்டிருந்தமையினால் அதற்கமைய கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்தன. பிரதிநிதித்துவமின்றிய மீதிகள் தொடர்பாக அறவிடமுடியாக் கடன் நிதியேற்பாடுகள் ஏதுமில்லை.

| கடன் காஎல்லை | நிதியேற்பாடுகள் |
|---|---|
| ஒராண்டுக்குக் கீழ் | ஏ துமில்லை |
| 1 ஆண்டுக்கு அதிகமானதும் 2 ஆண்டு வரையிலுமான | 100% |
| 2 ஆண்டுக்கு அதிகமானதும் 3 ஆண்டு வரையிலுமான | 30% |
| 3 ஆண்டுக்கு அதிகமானதும் 5 ஆண்டு வரையிலுமான | 50% |
| 5 ஆண்டிற்கு மேல் | 100% |

### (2) சொத்துக்கள் மற்றும் மதிப்பீட்டுக் கோட்பாடுகள்

### 2.1 ஆதனங்கள், பொறிமுறை மற்றும் உபகரணங்கள்

ஐந்தொகையில் ஆதனங்கள், பொறிமுறை மற்றும் உபகரணங்கள் என்பன திரண்ட தேய்மானம் குறைக்கப்பட்ட கிரயமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேய்மானம் தொடர்பாக பின்வருமாறு நேரடியாக மீள் மதிப்பீட்டு முறைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| தளபாடங்கள்,பொருத்துதல்கள் மற்றும் அலுவலக உகரணங்கள் | 12.5% |
| கணனிகள் | 20% |

தேய்மானம் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக சுவீகரிக்கப்பட்ட புதிய சொத்துக்கள் சுவீகரிக்கப்பட்ட தினத்தில் இருந்து தேய்மானம் கணிக்கப்பட்டது.
நெல்லிகொல்ல கட்டிடத்தின் மிகைதேய்மானம் ரூபா 1.06 மில்லியன் ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுகளுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 2.2 முதலீடு

பணிக்கொடை தொடர்பான நிலையான வைப்புக்கள் இதனுள் அடங்குகின்றன.

2.3 கையிருப்பு மற்றும் பொருட்பதிவேடு

கையிருப்பு மற்றும் பொருட்பதிவேடு என்பன கிரயம் அல்லது தேறிய வரவுவைக்கப்படும் பெறுமதிகளை விட குறைந்த பெறுமதியிலேயே மதிப்பிடப்படுட்டுள்ளது. கிரயம் FIFO அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளது.

2.4 வியாபார க் கடன் பெறுநர்கள் மற்றும் பெறுவனவுகள்

வியாபாரம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் புத்தக மதிப்பீட்டிற்கமைய காட்டப்பட்டுள்ளதுடன், சந்தேகத்திற்கிடமான பெறுவனவுகள் அறிவிட முடியாக் கடன் ஒதுக்கீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது..

2.5 ஏனைய பெறுவனவுகள்

வியாபார கடன்பெறுநர் தவிர ஏனைய பெறுபேறுகள் அவற்றின் பெறுமதிகளுக்கமைய காண்பிக்கப்பட்டுள்ளனவாகும்.

2.6 காசும் காசு ஒப்புரவுகளும்

இதனுள் கையிருப்பிலுள்ள நிதி மற்றும் வைப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன.

2.7 காசுப் பாய்ச்சல்

காசு பாய்ச்சல் கூற்று மறைமுக முறையொன்றுக்கு ஏற்பவே தயாரிக்கப்பட்டுள்ளது.

2.8 நிதி கணக்கீட்டுப் பெறுவனவுகள்

ஒதுக்கீட்டுக் கணக்கினூடாகவே 2007 ஆண்டில் இருந்து செஸ்நிதி திறைசேரியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

3. பொறுப்புக்கள்

ஐந்தொகை திகதியில் இருந்த அனைத்து பொறுப்புக்களும் கணக்கிலிடப்பட்டுள்ளது என்றபடியால் தெளிவான பொறுப்புக்கள் தொடர்பான நிதியேற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எனினும், திட்பநுட்பமாக கணக்கிட முடியாத தொகை உள்ளடக்கப்படவில்லை. கணக்கு மீதியின் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை, விண்ணப்பிக்கும் பட்சத்தில் வழங்கப்படுகின்ற பொறுப்புக்களாகும்.

3.1 பணிக்கொடை தொடர்பான நிதியேற்பாடு

சேவையில் 6 ஆண்டுகளைப் பூத்திசெய்துள்ள அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடை தொடர்பாக முழுமையான நிதியேற்பாடுகள் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதியின்மையின் காரணமாக, பணிக்கொடை நிதியேற்பாடுகளுக்கு தகுந்தவாறு வைப்புக்களின் பெறுமதியை அதிகரிப்பதற்கு முடியாதுள்ளது. எவ்வாறாயினும், சுமார் ரூபா 8.96 மில்லியன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிலையான வைப்புக்களாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

3.2 வாடகை அறிவிடல்

ஒருங்கிணைந்த நிதியிலிந்து மற்றும் செஸ் நிதியிலிருந்து முதலீடு செய்யும் நிறுவமொன்றாக தேயிலை சிறுபற்று நிலங்கள் அதிகார சபை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

3.3 முறைசாரா பொறுப்புக்கள்

தொழில் நியாயாதிக்கச் சபை மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக 3 மில்லியன் ரூபா முறைசாரா பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

4. 1981 இலிருந்து 2014 வரை IRDP, SHTDP, TDP மற்றும் பிற செயற்திட்டங்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற நிதி மற்றும் திறைசேரி ஒதுக்கீடுகளில் தேய்மானம் நிலவுகின்றது. ரூபா 100.8 மில்லியன் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிலிடப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவைகள் இனிவரும் ஆண்டுகள் தொடர்பாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்டு முன்கொணரப்பட்டுள்ளது.

தேயிலை சிறு பற்றுநிலங்களின் உரிமையாளர்கள் தொடர்பாக ரூபா 93.61 மில்லியன் ஆன பாதீட்டு ஏற்பாடு இவ் ஆண்டில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.மேற்படி சீராக்கம் காரணமாக பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 93.61 மில்லியன் அதிகரித்துள்ளது.

5. வலஹந்தூவை சுற்றுலா பங்களா மற்றும் 10.54 ஹெக்ரயார் விஸ்தீரணம் கொண்ட காணியானது, காணி மீள் நிரப்பும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமானது. எனினும் இக் காணி இதுவரை அதிகாரசபையிடம் ஒப்படைக்கப் படவில்லை.

6. மீள் பயிரிடுதல் தொடர்பான தேசிய தேவைப்பாட்டுக்கு இணங்க ஆண்டின் செயலாற்றுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

7. இவ் ஆண்டினுள் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள் தொடர்பாக, ‘திவிநெகும’ மற்றும் மண் பாதுகாப்பு, இயந்திரப் பொறிமுறைமய செயற்திட்டங்களின் ஊடாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பாக செலவிடப்பட்ட தொகை ரூபா 455.05 மில்லியனாகும்.பொறிமுறைமய நிகழ்ச்சித்திட்டம், திவிநெகும’ மற்றும் மண் பாதுகாப்புச் செயற்திட்டம் ஆகியன தொடர்பாக TRI இனாலும் பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சினாலும் நிதியளிக்கப்பட்டன.

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
உரிமை மாற்றக் கூற்று

ரூ.'000

| | உரிமையாளர்களின் கட்டுப்பாட்டு உரிமை மாற்றக் உரித்து | | | | |
|---|---|---|---|---|---|
| விபரம் | பங்களிப்பு மூலதனம் | பங்களிப்பு மூலதனம் | பங்களிப்பு மூலதனம் | பங்களிப்பு மூலதனம் | பங்களிப்பு மூலதனம் |
| 31/12/2013 இல் நிலுவை | 19,830 | 158,875 | 124,109 | (269,702) | 33,112 |
| ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை) | | | | 208,128 | 208,128 |
| ஆதன மீள்மதிப்பீட்டு இலாபம் | | | | | |
| ஆண்டிற்கான அரசாங்க மானியம் | 7,947 | | | | 7,947 |
| ஆண்டிற்கான பிற மானியம் | | | | | |
| ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வருமானம் | (2,558) | (98,275) | | | (100,833) |
| 31/12/2014 இல் நிலுவை | **25,220** | **60,600** | **124,109** | **(61,574)** | **148,354** |

**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**
**2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்**

குறிப்பு 1

ஆதனம், பொறியும் பொறித்தொகுதியும் 2014

| விபரம் | 2014.01.01 இல் நிலுவை | ஆண்டிற்கான கூட்டல் | மாற்றல்கள்/ அப்புறப்படுத்தல் | 2014.12.31 இல் கிரயம் |
|---|---|---|---|---|
| காணி | 72,468,393.51 | 963,404.11 | --------------- | 73,946,464.44 |
| கட்டிடங்கள் | 170,047,675.59 | 2,871,290.32 | --------------- | 172,404,299.09 |
| மோட்டார் வாகனங்கள் | 52,771,453.00 | 1,222,415.00 | --------------- | 53,993,868.00 |
| செயற்திட்ட மோட்டார் வாகனங்கள் | 13,945,935.00 | -------------- | --------------- | 13,945,935.00 |
| தளபாடங்கள் பொருத்துதல், அலுவலக உபகர. | 17,819,098.53 | 428,153.18 | (105,919.00) | 18,139,132.71 |
| கணனிகள் | 15,707,564.22 | 1,006,740.00 | (168,634.50) | 16,545,669.72 |
| பொறியும் பொறித்தொகுதியும் | 386,650.00 | --------------- | --------------- | 386,650.00 |
| மொத்தம் | 343,146,769.85 | 6,492,002.61 | (274,553.50) | 349,362,018.96 |

**தேய்மானம்**

| விபரம் | 2014.01.01 இல் தேய்மானம் | மீள்மதிப்பீட்டு தேய்மானம் | ஆண்டிற்கான தேய்மானம் | மாற்றல்கள்/ அப்புறப்படுத்தல் | திரண்ட தேய்மானம் |
|---|---|---|---|---|---|
| காணி | --------------- | --------------- | --------------- | --------------- | 73,431,797.62 |
| கட்டிடங்கள் | 28,271,123.58 | 3,410,790.46 | --------------- | 31,681,914.04 | 141,237,051.88 |
| மோட்டார் வாகனங்கள் | 16,424,269.80 | 10,418,627.02 | --------------- | 26,842,896.82 | 27,150971.18 |
| செயற்திட்ட மோட். வாக. | 8,328,059.50 | 1,783,459.50 | -------------- | 10,111,519.00 | 3,834,416.00 |
| தளபாடங்கள் பொருத்துதல், அலுவலக உபகரணங்கள் | 10,547,865.78 | 1,589,973.40 | (109,680.77) | 12,025,958.41 | 6,113,174.30 |
| கணனிகள் | 9,684,474.63 | 2,011,945.26 | (159,334.50) | 11,537,085.39 | 5,008,584.33 |
| பொறி, பொறித்தொகுதி | 386,649.00 | -------------- | ------------- | 386,649.00 | 1.00 |
| மொத்தம் | 73,642,442.29 | 19,214,795.64 | (269,015.27) | 92,586,022.66 | 256,775,996.31 |

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்

குறிப்புக்கள்

| விபரம் | ரூ. |
|---|---|
| முதலீடு - 2014 | |
| நிலையான வைப்புக்கள் – பணிக்கொடை | 9,993,082.42 |
| குறிப்பு 02 A | |
| பிற நிதிச் சொத்துக்கள் | 3,935,215.98 |
| கிரயம் | |
| பிற நடமாடும் சொத்துக்கள் | 6,145,433.14 |
| மொத்த நாற்றுக்கள் | |
| குறிப்பு 03 | 2,192,649.90 |
| | 9,629,930.26 |
| பொருட் கணிப்பீடு | 451,760.62 |
| காகிதாதிகள் | 107,197.60 |
| நானாவித கையிருப்பு | 619,938.47 |
| தேயிலை | 913,295.98 |
| உரம் | 28,563.96 |
| பாசம்ட்/மெதும் சோடியம் | 24,228.26 |
| பொலித்தீன் | 84,258.35 |
| தெளிகருவி | 212,689.61 |
| நாற்றுமேடை உபகரணம் | 972,117.58 |
| தராசு | 36,624.00 |
| கொழுந்து பறிக்கும் பிடி (Plucking seizers) | 3,982.50 |
| உதவிப் பக்கேஜ் | 385,078.93 |
| ரயர் மற்றும் ரியூப் | 15,662,316.02 |
| பயிற்சி உபகரணங்கள் | |
| பிற கையிருப்புக்கள் | |
| மொத்தம் | 18,857,298.69 |
| | 110,188,411.30 |
| குறிப்பு 04 05 | 748,328.84 |
| பெறுவனவுகள் | 11,079,409.76 |
| | 140,873,448.59 |
| கடன்பெறுநர் | 22,056,832.16 |
| கடன் மற்றும் முற்பணம் | |
| வைப்புக்கள் மற்றும் முற்பணம் | 118,816,616.43 |
| பிற ஐந்தொகை | |
| மொத்தம் | |
| கழிக்குக : அறவிடமுடியாக கடன் ஒதுக்கீடு | 800,157.99 |
| மொத்தம் | |
| குறிப்பு 06 | 492,678.75 |
| முற்கொடுப்பனவுகள் | 46,800,144.38 |
| | 27,963,000.00 |
| | 75,255,823.13 |
| குறிப்பு 07 | |
| நிதி மற்றும் வங்கி ஐந்தொகை | |
| நிதி மாற்றீடு | |
| கையிருப்பு மற்றும் வங்கியிலுள்ள நிதி | 12,103, 655.89 |
| வைப்புக்கள் | 4,716,594.46 |
| | 3,011,905.55 |
| மொத்தம் | 34,670,612.05 |

| | |
|---|---|
| <br><br>குறிப்பு 08<br>கொடுப்பனவுகள்<br><br>கடன்பெறுநர்<br>வைப்புக் கொடுப்பனவுகள்<br>பிற ஒதுக்கீடுகள்<br>பிற ஐந்தொகை<br><br>மொத்தம்<br><br><br>குறிப்பு 9<br>திரண்ட செலவுகள்<br>ஆண்டிற்கான சுற்றுலா<br>மின்சாரம்<br>ஊ.சே. நி. மற்றும் ஊ. ந. பொ. நிதியம்<br>கணனி பராமரிப்பு<br>கணனிக் கட்டணம்<br>வரி மற்றும் வாடகை<br>எரிபொருள்<br>விடுமுறைக் கொடுப்பனவு<br>மருத்துவ வசதிகள்<br>மோட்டார் சைக்கிள் பராமரிப்பு<br>பத்திரிகை<br>நலனோம்பல்<br>அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு<br>மேலதிக நேரம்<br>அஞ்சல் கட்டணம்<br>வாடகை<br>சம்பளம் மற்றும் வேதனம்<br>பாதுகாப்பு<br>ஈட்டப்பட்ட வாடகை<br>கட்டிட துப்புரவு/பேணல் பணிகள்<br>இலவசமாக வழங்கப்படும் தேநீர்<br>தொலைபேசி<br>T.S.H.S.F.<br>போக்குவரத்துக் கட்டணம்<br>போக்குவரத்து, சட்ட விவகாரம்<br>சீருடை மற்றும் சப்பாத்துக்கள்<br>காகிதாதிகள்<br>நூலகம்<br>நீர்<br>வாகனப் பராமரிப்பு<br>வாகனப் பராமரிப்பு<br><br>தபால் கட்டணம்<br>மீள நாற்று நடுகைக்கான மானியம்<br>புதிய நாற்று நடுகைக்கான மானியம்<br>பயிர் மறுசீரமைத்தல்<br>பரீட்சைக் கட்டணம்<br>விஸ்தரிப்பு நிகழ்ச்சித்திட்டம்<br>தொழிற்சங்கம்<br>டொலமைட் மானியம்<br>தாய் தாவரம்<br>பிற<br><br>மொத்தம்<br><br>குறிப்பு 10 –<br>ஊழியர்களுக்கான நலன்கள்<br>(பணிக்கொடை) | 54,535,767.95<br><br><br><br>65,000.00<br>132,885.04<br>4,979,094,04<br>9,200.00<br>116,336.67<br>8,700.00<br>366,827.50<br>23,119.29<br>753,572.32<br>125,330.00<br>8,230.00<br>17,114.00<br>20,160.00<br>229,895.86<br>21,446.10<br>264,074.00<br>560,692.08<br>168,445.56<br>10,850.31<br>21,100.00<br>24,360.00<br>147,057.49<br>194,351.00<br>41,950.00<br>790,211.47<br>6,722.50<br>38,711.00<br>9,520.00<br>22,415.15<br>277,945.00<br><br>30,030.00<br>92,223,497.23<br>38,405,011.28<br>3,998,099.50<br>332,115.60<br>5,230.00<br>212.00<br>228,190.00<br>216,355.00<br>134,586.25<br>16,145.42<br><br>145,044,789.36<br><br><br><br>139,449,953.77 |
| | |

මගේ අංකය / எனது இல. / My No.: எல்பி/ஜ/ரீஎஸ்எச்டிஏ/01/14/01
මබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015 ஒக்தோபர் 24

தலைவர்,
தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதகாரசபை

**தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை கொண்ட 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.



අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம், குறித்த சந்தர்ப்பங்களைத் தவிர, செலவினங்கள் வருமானத்திலிருந்து கழிப்பதன் மூலம் காட்டப்பட வேண்டியதாக இருக்கவில்லை. இருந்த போதிலும் வருமானம் மற்றும் செலவினம் புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக தேயிலை இலை விற்பனைகள் மற்றும் தாய்மாரின் சொட்டு மருந்துப் பகுதிகள் மற்றும் கந்தான பயிற்சி நிலையத்தில் பயிற்சி நெறிகளை நடாத்துதல் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் தேறிய பெறுபேறுகள் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 4,162,477 மொத்தமான சில்லறை வருமானங்களில், 56 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,331,811 ஆன தொகை வகைப்படுத்தாமல் சில்லறை வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம், தேயிலை தொழிற்சாலை வலையமைப்பின் விரிவாக்கலிற்காக 1998 முதல் 2001 வரையான காலத்தின் போது பெறப்பட்ட ரூபா 93,610,309 ஆன அரசாங்க மானியம் சரியாக சீராக்கப்பட்டிருக்கவில்லை, இது கணக்குகளில் முற்கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும், முறைப்படி சீராக்கப்படாமல் பிற்போட்ட வருமானமாக மீளாய்வாண்டின் நிதிசார் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஏற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஊழியர்களுடைய சேவைக் காலம் ஒரு ஆண்டு பூர்த்தியான பின்னர் ஊழியர்களுடைய பணிக்கொடை கொடுப்பனவிற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஊழியர்களுடைய சேவைக்காலத்தின் 6 ஆவது ஆண்டு தொடக்கத்தில் மொத்த ஏற்பாடுகள் செய்யப்படுதல் அதிகாரசபையின் கொள்கையாக உள்ளது. அத்தகையவாறு, அதிகாரசபை இந்த விடயத்தை கருத்திற் கொண்டிருக்காமையால் ஏற்பாடுகள் செய்கின்ற ஆண்டில் நிதிசார் விளைவுகளில் வழமைக்கு மாறான பாதிப்பின் சாத்தியம் உள்ளது.

(ii) ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ஊழியர் சேவைக் காலத்தின் 6 ஆவது ஆண்டு தொடக்கத்தில் மொத்த ஏற்பாடுகள் செய்தல் அதிகாரசபையின் கொள்கையாக உள்ள போதிலும், மாத்தறை, கந்தானை மற்றும் இரத்தினபுரி பிராந்திய அலுவலகங்களில் முழுமையாக 5 ஆண்டு சேவைக் காலத்திற்காக சேவைக்காலத்தின் 5 ஆவது ஆண்டிலிருந்து முழுக் காலத்திற்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை இலை மற்றும் தாய் மரங்களின் கொழுந்துகள் என்பவற்றின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 2,296,929 மற்றும் ரூபா 1,451,142 தொகையான வருமானம் மீளாய்வாண்டில் பிராந்திய அலுவலகங்களிலுள்ள கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த தோட்டங்களின் தேயிலை கொழுந்துகள் மற்றும் தாய் மரங்களின் பொறுமதி மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களை தவிர தற்போது பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் சந்தைப் பெறுமதியில் வெளிப்படுத்துவதற்கு மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு தொடர்புபட்ட பட்டோலைகளுடன் 05 ஊழியர்களுடைய கடன்கள் மற்றும் முற்பணக் கணக்குகள் மற்றும் 02 கடன்கொடுத்தோர் கணக்குகள் என்பவற்றின் பேரேட்டு மீதிகளின் இணக்கத்தில் ரூபா 898,423 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 39,498,038 தொகையான கட்டிடங்களின் கிரயம் நிலையான சொத்துப் பதிவேட்டில் ரூபா 40,602,444 ஆக காட்டப்பட்டிருந்தது, ஆதலால், ரூபா 1,104,405 ஆன வித்தியாசம் அவதானிக்கப்படுகின்றது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கந்தான பயிற்சி நிலையத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 9,189,862 மற்றும் ரூபா 34,873,648 ஆகும் அதேநேரம், கணக்கீட்டுச் சபை அறிக்கைகளின் பிரகாரம், முறையே ரூபா 7,170,987 மற்றும் ரூபா 34,542,475 ஆக காட்டப்பட்ட பெறுமதிகள் காணி மற்றும் கட்டிடங்களில் அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விபரங்கள் | பெறுமதி | கிடைக்கப்பெற்றிராத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| மீள்பட்டியலிடப்பட்ட மோட்டார் வாகனக் கடன்கள் | 7,688,482 | பட்டோலைகள் மற்றும் ஆதார ஆவணங்கள் |
| தேயிலை பரிசோதகர்கள்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் என்போருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடன்கள் | 8,780,927 | - மேற்படி - |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 207.48 மில்லியன் நேரொத்த பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 106.11 மில்லியன் மிகையில் விளைவித்திருந்தது. ஆதலால் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 313.59 மில்லியன் முன்னேற்றத்தை காட்டுகின்றது. ரூபா 229.93 மில்லியன் திரண்ட நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் அதிகரிப்பு மற்றும் ரூபா 94.95 மில்லியனால் அபிவிருத்தி செலவினங்களின் வீழ்ச்சி என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களிப்பு செய்திருந்தது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக/அதிரசபையால் அறிவுறுத்தப்பட்ட சட்ட நடவடிக்கை

நான்கு ஊழியர்கள் ரூபா 3,115,116 மொத்தமான இழப்பீடு கோரி அதிகாரசபைக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்கள்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 தேயிலை உற்பத்திக்கு தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 338.03 மில்லியன் கிலோகிராம்களாக இருந்ததுடன் அவற்றில் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு 247.38 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 73.18 சதவீதமாகும். முன்னைய ஆண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 340.22 மில்லியன் கிலோகிராம்களாக இருந்ததுடன் அவற்றில் தேயிலை சிறுநிலவுடமையாளர்கள் 244.30 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 71.81 சதவீதம் பங்களிப்பு செய்திருந்தார்கள். அதன் பிரகாரம் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது 1.37 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

#### 4.1.2 தேயிலை தோட்ட அபிவிருத்தி உதவுதொகைகள்

சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான தேயிலை மீள் நடுகை மற்றும் புதிய மரநடுகை, விரிவாக்கல் சேவைகளின் ஏற்பாடுகள், சமூக அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் போன்ற அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட உதவுதொகைகளாக ரூபா 345.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்காகவும் தோட்ட அபிவிருத்தி கிரயம் மற்றும் அமுலாக்கல் கிரயம் என்பன கிழே தரப்படுகின்றன.

| | **2014** | **2013** | **2012** | **2011** | **2010** |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்திக் கிரயம் (ரூபா மில்லியன்) | 345.1 | 440.0 | 276.3 | 208.0 | 189.2 |
| அமுலாக்கல் கிரயம் (ரூபா மில்லியன்) | 252.8 | 238.5 | 233.5 | 218.5 | 205.4 |
| அபிவிருத்திக் கிரயத்தின் ரூபா 1 இற்கான அமுலாக்கல் கிரயம் (ரூபா) | 0.73 | 0.54 | 0.85 | 1.04 | 1.08 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அபிவிருத்திக் கிரயம் ரூபா 94.9 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் அபிவிருத்தி கிரயத்தின் ஒரு ரூபா இற்கான அமுலாக்கல் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 0.19 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) தேசிய வேண்டுகையின் பிரகாரம், ஆகக் கூடிய விளைச்சலை பெறுவதற்கும் தேயிலைக் காணிகளை பேணுவதற்கும் 2,300 ஹெக்டெயர்கள் வருடாந்தம் மீள்நடுகை செய்யப்படவேண்டும். எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், உதவு தொகை திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 720 ஹெக்டெயர்கள் மாத்திரம் மீள்நடுகை செய்யப்பட்டிருந்தது, 116,492 ஹெக்டெயர்கள் மொத்த முதிர்வடைந்த தேயிலைக் காணிகளிலிருந்து 0.62 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அந்த முதிர்வடைந்த தேயிலைக் காணிகளிலிருந்து 21,613 ஹெக்டெயர்கள் 25 ஆண்டுகளை விட பழமை வாய்ந்த மரங்களாக இருந்தது. புள்ளிவிரங்களிலிருந்தான தகவல்கள் சொல்லப்பட்ட மரநடுகைகளின் முழுப் பரப்பளவினதும் மீள்நடுகையின் அவசியத்தைக் காட்டியது.

(இ) மீளாய்வாண்டில் தேயிலை மீள்நடுகைக்காக வழங்கப்பட்ட உதவு தொகை ரூபா 258.09 மில்லியனானதுடன் இது ரூபா 391.75 மில்லியன் தொகையான எதிர்பார்க்கப்பட்ட உதவுதொகையின் 65.88 சதவீமாக இருந்தது.

### 4.1.3 பயிர்ச்செய்கை புனரமைப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீள் நடுகைக்காக பின்வரும் சிபார்சு செய்யப்பட்ட முறைகளால் மரங்கள் ரூபா 0.8 மில்லியனிற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 0.271 மில்லியன் மரங்கள் மாத்திரம் ஆண்டின் போது நாட்டப்பட்டிருந்தது அது இலக்கிடப்பட்ட தொகையின் 34 சதவீதம் மாத்திரமேயாக உள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் பயிர்ச்செய்கை புனரமப்பிற்காக ரூபா 17.5 மில்லியன் தொகையான பயிர்ச்செய்கை உதவு தொகைகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5.9 மில்லியன் அல்லது எதிர்பார்த்த தொகையின் 44 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், உதவுதொகைகளிற்காக வழங்குவதற்கு 2,089 அனுமதிப் பத்திரங்கள் எதிர்பார்க்கப்பட்டது. இருந்த போதிலும், 1,498 அனுமதிப் பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.1.4 தேயிலை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான சுழற்சிக் கடன் நிதியம்

மீளாய்வாண்டு தொடர்பான வருடாந்த அறிக்கையின் பிரகாரம், மத்திய வங்கி எஸ்டிஆர் 15.4 மில்லியன் ஒதுக்கியிருந்ததுடன் தேயிலை மரநடுகைக்காக 20 விண்ணப்பங்களிற்கான கடன்கள் மற்றும் தேயிலை சிறு நிலவுடமையாளர்களின் அபிவிருத்திக்காக செய்யப்பட்ட சுழற்சி நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது வர்த்தக நாற்றுமேடைகளிற்காக 02 விண்ணப்பங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 4.1.5 நிறுவனரீதியான தோட்ட நாற்றுமேடைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 08 தோட்ட நாற்றுமேடைகளின் செயற்பாட்டு விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 167,217 ஆன நேரொத்த தேறிய மிகைகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 52,154 ஆன தேறிய மிகையில் இருந்தன. ஆதலால் ரூபா 115,063 ஆல் மிகையில் குறைவை காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மரநடுகை நாற்றுமேடைகளின் மொத்த இலாப வீதம் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த 2.3 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 0.6 சதவீதமாக இருந்தது.

(இ) திஸ்பன நாற்றுமேடையில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 206,540 மற்றும் ரூபா 232,177 தொகையான நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டில் 07 நாற்று மேடைகளில் அழிந்துபோன செடிகளின் எண்ணிக்கை 150,754 ஆக இருந்ததுடன் மொத்த செடிகளின் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரகங்துங்கொட, கிகுலோயா மற்றும் வோகன் நாற்றுமேடைகளின் அழிந்த செடிகள் மீளாய்வாண்டின் போது அசாதாரணமாக அதிகரித்திருந்தன.

### 4.1.6 செயற்திட்ட உதவிகளின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூபா 19,880,000 ஆன தொகையில், புதிய மரநடுகை மற்றும் மீள்நடுகை, முறையான பயிர்ச்செய்கை மற்றும் தேயிலை காணிகளில் பயிர்ச்செய்கை புனரமைப்பு (நிரப்புதலில்) போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக 08 பிராந்திய அலுவலகங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 7,070,800 ஆன தொகை மற்றும் தலைமை அலுவலகத்தில் இருந்த ரூபா 6,211,877 ஆன தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் 08 மாவட்டங்களில் பயிர்ச்செய்கைக்காக புதிய மரநடுகை மற்றும் மீள்நடுகை, முறையான பயிர்ச்செய்கை மற்றும் தேயிலை காணிகளில் பயிர்ச்செய்கை புனரமைப்பு (நிரப்புதலில்) போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி உதவி ரூபா 21,608,880 ஆக இருந்ததுடன் உண்மையாக வழங்கப்பட்ட நிதி உதவி ரூபா 12,943,456 ஆக இருந்தது. இது 25 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது.

(இ) மண்பரிசோதனை உதவி செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 357,725,510 ஆன தொகையில் ரூபா 18,297,791 ஆன தொகை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் இருந்தது.

(ஈ) குறைந்த வருமானம் பெறுகின்ற பெண்களிற்கான தேயிலை செயற்திட்டத்திற்காக களுத்துறை பிராந்திய அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 348,000 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் அந்த தொகை ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 பிராந்திய அலுவலகங்களில் உத்தியோகத்தர் விடுதிகள் மற்றும் தேயிலைக் காணிகள் உள்ளடங்கலாக முறையே ரூபா 23,161,486 மற்றும் ரூபா 55,302,611 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையாண்மை மீளாய்வாண்டு இறுதிவரையும் அதிகாரசபையின் உடமையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையுடன் காலி பிராந்திய அலுவலகத்திற்கு சொந்தமான வலகந்துவ உப அலுவலகம், நாற்று மேடை மற்றும் அக்மீமன தாய் தோட்டம் விரிவாக்கல் நிலையம் போன்றன உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2014 நவம்பர் 12 இல் ரெம்பிள் றீஸ் இல் நடைபெற்ற தேயிலை விவசாயிகள் கூட்டத்திற்காக ரூபா 5,908,811 தொகை செலவழித்தது கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

### 4.4 மனிதவள முகாமைத்துவம்

அதிகாரசபையால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 422 ஆக இருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஆரம்ப மட்டத்தில் 06 பதவிகள் உள்ளடங்கலாக மற்றும் உள்ளபடியான பதவியணி 430 ஆக இருந்தது. அத்திகதியில் 53 பதவிகளில் மிகையும் 51 வெற்றிடங்களும் இருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக வெற்றிடப் பதவிகள் பிரதி பொது முகாமையாளர் (அபிவிருத்தி), முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) முகாமையாளர் (அபிவிருத்தி) மற்றும் முகாமையாளர் (பயிற்சி) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

(ஆ) 2014/10 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிலுள்ள மிகையான பதவியணி 180 நாட்களை பூர்த்தியாக்கியிருந்த 22 ஊழியர்களை நிரந்தரமாக்கியமையால் 53 ஆக இருந்தது.

(இ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், தேயிலை விவசாயிகளிற்கான விரிவாக்கல் முகவர்களின் விகிதம் வினைத்திறனான விரிவாக்கல் சேவைகளிற்காக அண்ணளவாக 1:1000 ஆக இருக்க வேண்டும்.

இருந்த போதிலும், முன்னைய ஆண்டில் 1:2730 ஆக இருந்த இந்த விகிதம் 26 தேயிலை பரிசோதகர்கள்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் நிலவியமை காரணமாக மீளாய்வாண்டில் 1:2736 வரை அதிகரித்தருந்தது.

## 4.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2014 நவம்பர் 19 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தில் அதிகாரசபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இலலாத பதில் கடமை பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவருக்கு நியமித்தல் மற்றும் படிகளை செலுத்துதல் தொடர்பில் விவாதிக்கப்பட்டிருந்தது. உதவி முகாமையாளரின் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) பதில் கடமை பதவியில் அவரை நியமித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையிலிருந்து விலகி படிகளை செலுத்துவது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு நெறிப்படுத்தல் வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், அதிகாரசபை கணக்காய்வு திகதியான 2015 ஆகஸ்ட் 14 வரையும் நெறிப்படுத்தலை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான தொகைகளிற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது வினைத்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் குறைந்தது 03 மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய மீதிகள்
(ஆ) காசுக் கட்டுப்பாடு மற்றும் வங்கி கணக்கிணக்கங்கள்
(இ) உதவுதொகை கொடுப்பனவுகள்
(ஈ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவுகளும் அறவீடுகளும்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி